# உதயன்

சுடர் : 36 | கதிர் : 286 | வெள்ளிக்கிழமை | ஆவணி 24 ஆம் நாள் 10 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## யாழ்ப்பாணத்தில் 9 பேர் சாவு நாட்டில் 175பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 10
கொரோனாத் தொற்றால் யாழ்ப் பாணத்தில் நேற்று 9 பேர் உயிரிழந்துள்ள 19 ▶

# அன்றாடப் பாவனைப் பொருள்களின் விலைகள் விரைவில் அதிகரிக்கும்

## அவற்றின் இறக்குமதியும் சரிவடையும் அபாயம்

கொழும்பு, செப்ரெம்பர் 10
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அன்றாடப் பாவனைப் பொருள்கள் சிலவற்றின் விலைகள் சடுதியாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் அவற்றின் இறக்குமதியும் சரிவடைந்து அந்தப் பொருள்களுக்கு மிகப் பெரிய தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும் எதிர்வுகூறப்படுகின்றது. 19 ▶

| |
|---|
| தொலைத்தொடர்புச் சாதனங்கள் (செல்லிடத் தொலைபேசிகள் மற்றும் நிலையான தொலைபேசிகள் போன்றவை. |
| வீட்டுச் சாதனங்கள் (மின்விசிறிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள் டிஜிட்டல் புகைப்படக் கருவிகள், தலைமுடிக் கௌவிகள், சூடாக்கிகள், விளக்குகள், அனல் அடுப்பு போன்றவை) |
| அணியும் ஆடை மற்றும் துணைப் பொருள்கள் (குழந்தைகளுக்கான ஆடைகள், உள்ளாடை, விளையாட்டு உடைகள், இரவு ஆடைகள் மற்றும் பிஜாமாக்கள், மேலங்கிகள், சேட் மற்றும் பிளவுஸ், முழு உடை, விளையாட்டுக்கு அணியும் உடை மற்றும் நீச்சலுடைய, ரி–சேர்ட், உள்ளாடை பாதணி, மணிக்கூடுகள், வெயிலுக்கு அணியும் கண்ணாடி மற்றும் ஏனைய துணை பொருட்கள் போன்றவை. |
| வீட்டு மற்றும் தளபாடப் பொருட்கள் (தளபாடம், விளக்குகள் மற்றும் விளக்குப் பொருத்தும், அலங்காரப் பொருள்கள், மேசைப் பொருள்கள் மற்றும் சமையலறைப் பொருள்கள், கட்டில் விரிப்புகள் போன்றவை. |
| இறப்பர், ரயர்கள் |
| வாயுச் சீராக்கிகள் |
| பழவர்க்கங்கள் (உடன் அப்பிள், திராட்சை, தோடம்பழம் மற்றும் உலர்த்திய பழங்கள், பழரசங்கள் போன்றவை. |
| ஒப்பனை பொருட்கள் மற்றும் மலசலகூடப் பொருட்கள் (வாசனைப் பொருட்கள், ஒப்பனைத் தயார்ப்படுத்தல்கள் போன்றவை) |
| குடிவகைகள் (பியர், வையின், கனிமக் குடிநீர் மற்றும் ஏனைய குடிவகைகள் போன்றவை) |
| ஏனைய உணவு மற்றும் குடிவகைகள் (தானியத் தயார்ப்படுத்தல்கள் மாவுச் சேர்க்கை, சொக்லேட், முளைத்தானியம் மீன் துண்டங்கள், பாலாடைகள் கட்டி, வெண்ணெய் போன்றவை |
| ஏனைய உணவல்லா நுகர்வுப் பொருட்கள் (இசைச் சாதனங்கள், புகையிலைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், காகிதாதிகள் போன்றவை) |

நூறு சதவீத காசு எல்லை தேவைப்பாடுடைய பொருள்கள்

## யாழ்ப்பாணத்துக்கு மஞ்சள் கடத்திய மூன்று பேர் கைது

யாழ்ப்பாணம், செப். 10
யாழ்ப்பாணத்துக்கு 500 கிலோகிராம் மஞ்சளைக் கடத்தி வந்த 3 பேர் நேற்றுக் 19 ▶

## பானைகளை ஆற்றில் போட்டவருக்கும் தொற்று

கொழும்பு, செப். 10
இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் மருத்துவ ஆலோசகர் வைத்தியர் எலியந்த வைட் மற்றும் அவ 16 ▶

## 12 – 18 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசி

*சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 10
12 தொடக்கம் 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு விரைவில் கொரோனாத் தடுப் 19 ▶

## எரிவாயு விலை மீண்டும் அதிகரிப்பா?

கொழும்பு, செப். 10
எரிவாயு விலை கடந்த மாதம் அதிகரிப்புச் செய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது மீண்டும் விலை அதிகரிப்புக்கான கோரிக்கையை லாப்ஸ் நிறுவனம் முன் 16 ▶

## கடன் சலுகை காலம் நீடிப்பு

கொழும்பு, செப். 10
கொரோனா பரவலால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கும், தனிப்பட்டவர்களுக்குமான கடன் சலுகைக் காலத்தை மேலும் நீடிக்குமாறு இலங்கை மத்திய வங்கி கோரியுள் 16 ▶

## கொரோனாவின் மோசமான தாக்கம் மீண்டும் எந்த நேரத்திலும் ஏற்படலாம்

*அச்சமூட்டுகிறார் சுகாதார அமைச்சர்*

கொழும்பு, செப். 10
நாட்டில் மீண்டும் எந்த நேரத்திலும் கொரோனாவின் மோசமான தாக்கம் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள் 19 ▶



## கொரோனாத் தொற்றை கண்டறிய புதிய உபகரணம் கண்டுபிடிப்பு

*பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சாதனை*

கொழும்பு, செப். 10
கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமையை 16 ▶

## முடக்கம் தொடருமா, தளருமா?

# இன்று தீர்க்கமான முடிவு

கொழும்பு, செப். 10
நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை குறைந்தபட்சம் மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்குமாறு மருத்துவர்கள் உட்பட சுகாதாரத் தரப்பினரும், அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில், இது தொடர்பில் இன்று இறுதி 19 ▶

## வவுனியாவில் சடலம் மாற்றி ஒப்படைப்பு

*வடக்கில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்கள் விடயத்தில் கவனயீனம்*

வவுனியா, செப். 10
வவுனியாவில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த இருவரின் உடல்கள் வவுனியா மருத்துவமனையில் உறவினர்களிடம் மாற்றி ஒப் 19 ▶

## போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் சுகாதாரத்துறையை அவமதித்தாரா?

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அறிக்கையால் பரபரப்பு*

கொழும்பு, செப். 10
வடக்கில் கொரோனாத் தொற்று அதிகரித்ததால் சுகாதார அமைச்சு விடுத்த வேண்டுகோளை ஏற்றே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் பொறுப்பை மீண்டும் ஏற்றுக்கொண்டதாக மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்திருப்பதானது, சுகாதாரத் துறையினரை அவமதிப்பதைக் 19 ▶

## கடித விவகாரம் சூடுபிடிக்கிறது

*ஒரே நாளில் இரு தரப்புக்களும் பத்திரிகையாளர் சந்திப்பு*

யாழ்ப்பாணம், செப். 10
ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பிய விவகாரம் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இரண்டு பத்திரிகையாளர் சந்திப்புக்கள் இன்று நடைபெறவுள்ளன. யாழ்ப் 16 ▶

## கர்ப்பம் தரிப்பதைத் தாமதப்படுத்த கோருவது மக்கள் நலனுக்கானதாம்!

*பிரதிப் பணிப்பாளர் நாயகம் விளக்கமளிப்பு*

கொழும்பு, செப். 10
பெண்கள் கர்ப்பம் தரிப்பதை ஓராண்டு தாமதப்படுத்துமாறு சுகாதார அதிகாரிகள் அறிவித்திருப்பது அரசின் நலனுக்காக செய்யப்படவில்லை 19 ▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கில் முதன்முதலாக

# 20 வயதைக் கடந்தோருக்கு மன்னாரில் நேற்றுத் தடுப்பூசி

மன்னார், செப். 10

**வடக்கில் முதன்முதலாக மன்னார் மாவட்டத்தில், 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் சினோபார்ம் தடுப்பூசி செலுத்தும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வடக்கில் ஏற்கனவே 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் தொடக்கம் மன்னார் மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டோருக்கும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 20 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, நானாட்டான் டிலாசால் பாடசாலை, மாந்தை மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம், மறிச்சுக்கட்டி அல்ஜெசிரா பாடசாலை மற்றும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றில் சினோபார்ம் முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் முதலாவது சினோபார்ம் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுக்கு 2ஆவது சினோபார்ம் தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது. (த-56,213)

# அமைச்சர்கள், எம்.பிக்கள் 8 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, செப். 10

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 8 பேர் தற்போது தனிமைப்படுத்தலில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்களான சமல் ராஜபக்ச, பந்துல குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்த, டீ.வி.சாணக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திஸாநாயக்க, அசங்க நவரத்ன, கெவிந்து குமாரதுங்க மற்றும் டயானா கமகே ஆகியோரே இவ்வாறு தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

இதேவேளை, அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன ஆகியோர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையிலும் ஏனையவர்கள் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணிய நிலையிலும் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

தனது வீட்டில் ஊழியர் ஒருவருக்குத் தொற்று உறுதியானதால் தான் தனிமைப்படுத்தலில் இருக்கின்றேன் என்று டயானா எம்.பி தெரிவித்துள்ளார். (த-22)

# கண்காணிப்பு எம்.பிக்கள் நியமனம் வேண்டாம்!

கொழும்பு, செப். 10

அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கான கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமனத்தை உடன் நிறுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"அபிவிருத்தி உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இவ்வாறு நியமித்து குறித்த உறுப்பினர்களுக்கு வாகனம், எரிபொருள் உள்ளிட்ட சலுகைகள் வழங்கப்படவுள்ளன. தற்போதைய சூழ்நிலையில் இது வீண் செலவாகும். எனவே, கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமனத்தை கைவிட்டு, அதற்காக செலவிடும் பணத்தை மருத்துவமனை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார். (த-44)

# அனைத்துத் துறைகளிலும் கோத்தா அரசு படுதோல்வி!

### உதயகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

கோத்தாபய அரசு அனைத்துத்துறைகளிலும் படுதோல்வியடைந்துள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.உதயகுமார் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் பொருளாதாரம் முற்றுமுழுதாக வீழ்ச்சியடைந்துள்ளது. அரசு கடனுக்கு மேல் கடன் பெற்று நாட்டில் கடன் சுமையை அதிகரித்துள்ளது.

நாட்டின் வளங்களை, இயற்கை வளங்களை, கடல் வளங்களை வெளிநாடுகளுக்கும் சர்வதேச நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் அரசு தாரைவார்த்துக் கொடுத்துள்ளது.

இறக்குமதித் தடையால் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உர இறக்குமதித் தடையால் நாட்டில் பஞ்சம் ஏற்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக நாட்டு மக்கள் அனைவரும் கஷ்டப்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கொரோனாக் காலத்தில் மக்களுக்குச் சுமைக்கு மேல் சுமை அதிகரிக்கப்படுகின்றது. ஆனால், அரசுக்கு இது குறித்து எவ்விதக் கவலையும் இல்லை" -என்றார். (த-22)

# தொற்றாளர் எண்ணிக்கை குறைந்தாலும் சுகாதாரக் கட்டுப்பாடுகளைக் கைவிடாதீர்

### கிளிநொச்சி சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்து

கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 200 ஐக் கடந்துள்ளநிலையில், கடந்த சில நாள்களாகத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 100 க்குள் காணப்படுகிறது. எனவே இந்த எண்ணிக்கைக் குறைவை மாத்திரம் கருத்திற்கொண்டு நோய்த்தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது எனக் கருதி பொதுமக்கள் சுயகட்டுப்பாடுகளை மீறி நடக்கக்கூடாது என சுகாதாரத்தரப்பினர் கோரியுள்ளனர்.

நோய்த் தொற்று முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை பொதுமக்கள் அனைவரும் சுகாதாரப் பாதுகாப்பு, கட்டுப்பாட்டு நடைமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

**சாதக பெறுபேற்று வீதம்**

கொரோனாத் தொற்றானது ஒரு பிரதேசத்தில் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதைக் குறிப்பதற்கான நியமங்கள் உலக சுகாதார நிறுவனத்தினால் 2020 இல் பிரசுரிக்கப்பட்டன. அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட நியமங்களின் அடிப்படையில் ஒரு பிரதேசத்தில் சாதக பெறுபேற்று வீதமானது 5 வீதத்திலும் குறைவானதாக இருந்தால் அது அந்தப் பிரதேசத்தில் தொற்றானது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதைக் குறிக்கும் ஒரு குறிகாட்டியாக கொள்ளப்படுகிறது.

இந்த சாதகப் பெறுபேற்று வீதத்தைப் பெறுவதற்கான சூத்திரம் மிக இலகுவானது. கண்டுபிடிக்கப்பட்ட தொற்றாளர்களது எண்ணிக்கையை, செய்யப்பட்ட மொத்த பரிசோதனைகளின் எண்ணிக்கையால் பிரித்து வரும் விடையை 100 ஆல் பெருக்க வேண்டும். உதாரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 100 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 10 முடிவுகள் சாதகமாக வந்திருந்தால் (அதாவது 10 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தால்) இதற்குரிய சாதகப் பெறுபேற்று வீதம் இவ்வாறு அமையும்: (10/100) x 100 =10%, அதாவது சாதகப் பெறுபேற்று வீதம் 10 ஆகும்.

இந்த சாதகப் பெறுபேற்று வீதம் தினமும் கணிக்கப்பட முடியும். எனினும், உலக சுகாதார நிறுவனம் வாராந்தம் கணிப்பதையே பரிந்துரைத்துள்ளது. அதனால் பொதுவாக ஒரு வாரத்தில் மொத்தமாகச் செய்யப்பட்ட பரிசோதனைகள் மற்றும் அந்தப்பரிசோதனைகளில் சாதகமாக வந்த முடிவுகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் கொண்டு வாராந்தம் சாதகப் பெறுபேற்று வீதம் கணிக்கப்படுகிறது. 100 பரிசோதனைகள் செய்யப்பட்டால் அதில் 33 பரிசோதனை முடிவுகள் சாதகமாக வரும் நிலையே தற்போதும் உள்ளது.

**நோயால் இறக்கும் வீதம்**

கொரோனாப் பரவலின் இன்னொரு குறிகாட்டியாக நோயால் இறக்கும் வீதம் அமைந்துள்ளது. அதாவது இனங்காணப்படும் தொற்றாளர்களது மொத்த எண்ணிக்கையால் அவர்கள் மத்தியில் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கையைப் பிரித்து வரும் விடையை 100 ஆல் பெருக்குவதன் மூலம் இந்த நோயால் இறக்கும் வீதம் கண்டறியப்படுகிறது.

இதற்கு அமைய கடந்த மாதத்தின் இரண்டாவது வாரத்தில் 0.3% ஆக இருந்த நோயால் இறக்கும் வீதம் இந்தமாதத்தின் முதல் வாரத்தில் 1.3% ஆக அதிகரித்துள்ளது. அதாவது இனங்காணப்படும் 100 தொற்றாளர்களில் ஒருவர் உயிரிழக்கிறார். - என்று தெரிவித்தனர். (த-214)

# சாவகச்சேரி நகரிலுள்ள சங்கக்கடையில் பொருள்கள் வாங்கலாம்

சாவகச்சேரி, செப். 10

சாவகச்சேரி நகர்ப்பகுதி மக்கள் சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நகர (கோப்சிற்றி) கடையில் தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

நகரப்பகுதியில் இயங்கிவந்த சங்கத்தின் கிளை, தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதெனவும் கிளைக்கான கட்டட வசதி கிடைத்ததும் வழமைபோல மக்களுக்கான சேவைகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் சர்வதேச உதைபந்தாட்டப்போட்டி

## நவம்பரில் நடக்குமென அமைச்சர் நாமல் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், செப். 10**

**யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் சர்வதேச உதைபந்தாட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச கூறியுள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அபிவிருத்திகள் தொடர்பான கள ஆய்வின்போது யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனிடம் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதன்படி, யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆசிய நாடுகளின் சர்வதேச உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் சில போட்டிகளை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று நாமல் கூறியுள்ளார்.

இதுதவிர, நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது தான். எனினும், இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அரசு, வடக்கு, கிழக்கு, தெற்கு என்று பார்க்காது தெற்கில் தெய்வேந்திர முனையிலிருந்து வடக்கில் பருத்தித்துறை முனைவரை அபிவிருத்திவேலைகளை மேற்கொண்டுவருகின்றது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் அதிகளவிலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண மாநகர சபைக்கு புதிய கட்டடம் ஒன்று பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தடையையுந்தாண்டி அதனைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தோடு அபிவிருத்தியையும் அரசு மேற்கொண்டுவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்துள்ள வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொலிஸார் தயாராக உள்ளார்கள்.

எந்தவோர் இடத்திலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றால் உரிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்தவதன் மூலம் வன்முறைச் சம்பவங்களோடு தொடர்பானவர்களைக் கைதுசெய்து நடவடிக்கை எடுக்கமுடியும். - என்றார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ச, யாழ்.ஜோன் பொஸ்கோ பாடசாலை அருகில் புனரமைக்கப்பட்டுவரும் குளம், ஐரோட் திட்ட வீதி, ஆஸ்பத்திரி வீதியில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித்திட்டம், யாழ். மாநகர சபை புதிய கட்டடம் என்பவற்றை நேற்றுப் பார்வையிட்டார்.

இதன்போது யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இ.அங்கஜன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதநாத் காசிலிங்கம், யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், யாழ்ப்பாண பிரதேச செயலர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (த-26)

### தனிமைப்படும் குடும்பங்களுக்கான

# 10,000 ரூபா உலருணவுப்பொதி பாதியாகக் குறைக்கப்பட்டது

சாவகச்சேரி, செப். 10

கொரோனாத் தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இரு கட்டங்களாக வழங்கப்பட்டுவந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதி தற்போது 5 ஆயிரம் ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும் மரக்கறி வகைகளும் இரு கட்டங்களாக முன்னர் விநியோகிக்கப்பட்டன.

தற்போது கொரோனாத்தொற்றுக் காரணமாக பல குடும்பங்களை தனிமைப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில், தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் மட்டுமே வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

# தமிழ் அரசுக் கட்சியின் கதை முடிவுறும் தறுவாயிலுள்ளது

## கூறுகின்றார் ஆனந்தசங்கரி



யாழ்ப்பாணம், செப். 10

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கதை முடியும் தறுவாயில் உள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் தமிழ் அரசுக் கட்சி தனித்து பயணிக்கக்கூடியதான நிலைப்பாட்டில் உள்ளது. இதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சாதக பாதக நிலை தொடர்பில் ஊடகவியலாளர்கள் அவரிடம் வினாவினர். அதற்குப் பதிலளிக்கும்போதே ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்தார். (த6)

# பொலிஸார் என்றுகூறி பணம் பறித்த ஆசாமிகள்

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, செப். 10

முகக்கவசம் அணிந்து பொலிஸார் போன்று சென்ற இருவர், வீதியில் மோட்டார்சைக்கிளில் பயணித்தவரை வழிமறித்து ஆவணங்களைப் பரிசோதித்துவிட்டு அவரிடமிருந்த பணத்தை அபகரித்துச்சென்றனர்.

இந்தச் சம்பவம், கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடு பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது.

முகக்கவசம் அணிந்துசென்ற நபர்கள், வீதியில் சாதாரண மோட்டார் சைக்கிளில் சென்றவரை, வழிமறித்து பொலிஸார்போன்று உரையாடி உடலை சோதனையிட்டு, வீதி அனுமதிப்பத்திரம் உள்ளதா, ஏன் தலைக்கவசம் அணியவில்லை? என்றுகேட்டதோடு, அந்த நபரின் அனுமதியின்றி அவரின் பணப்பையை எடுத்து, அதற்குள்ளிருந்த தேசிய அடையாள அட்டையை மீள ஒப்படைத்து அதன் நிழல் பிரதியுடன் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கூறிவிட்டு பணப்பையுடன் சென்றுவிட்டனர்.

அவர்கள் பணத்தை எடுத்துச்சென்றதால், பாதிக்கப்பட்ட நபர், அவசர அவசரமாக வீடுசென்று தலைக்கவசத்தை அணிந்துகொண்டு தேசிய அடையாள அட்டையின் பிரதியை பெற்றுக்கொண்டு பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார். நடந்த சம்பவத்தை அங்குள்ள பொலிஸாருக்குக் கூறியபோது, தமது பொலிஸ் நிலையத்திலிருந்து எவருமே வெளியில்செல்லவில்லை என்று பொலிஸார் கூறியுள்ளனர். தவிர, சிவில் உடையில் வீதியில் பரிசோதனை மேற்கொள்வதில்லை என்றும் அவரிடம் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனையடுத்தே தன்னை அந்த இருநபர்களும் ஏமாற்றியுள்ளனர் என்பது பாதிக்கப்பட்டவருக்கு தெரியவந்துள்ளது. தனது பணப்பையில் 16 ஆயிரத்து 575 ரூபா பணம் இருந்தது என்றும் அந்தப் பணத்தைப் பறிகொடுத்தநபர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (த-113)

# எந்தவித தயக்கமுமின்றி மருத்துவமனைக்கு வாருங்கள்

## நோய்முற்றமுன்னரே சிகிச்சைபெற்று குணமடையுங்கள் வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் அறிவுறுத்தல்

வவுனியா, செப். 10

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நோயாளர்கள் எவ்வித தயக்கமுமின்றி சிகிச்சை பெற வவுனியா பொது மருத்துவமனைக்கு வரமுடியும் என்று வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் க.ராகுலன் தெரிவித்தார்.

இந்த மருத்துவமனைக்கு வருவதால், அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்ற அச்சம் காரணமாக வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறக்கூடியவர்கள்கூட மருத்துவமனைக்கு வர பின்னிற்கின்றனர் என்று கூறப்படும் தகவல் தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய கொரோனாக் கடுந்தொற்றிலிருந்து மக்களையும் நோயாளர்களையும் பாதுகாப்பதற்கு, தொற்றை முற்கூட்டி அடையாளப்படுத்துதலும் விரைவான உடனடி சிகிச்சையை உறுதிப்படுத்துதலும் அத்தியாவசியமானதாகும்.

கடும் சுவாச சிக்கலுடன், நாட்பட்ட நிலையில், சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வரும் கொரோனா நோயாளர்களுக்கே சிகிச்சை பயனளிக்காதுபோகும் சாத்தியம் அதிகமாகவுள்ளது. அது உயிரிழப்பையும் ஏற்படுத்தக்கூடும் என்று விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, கொரோனாத் தொற்றுநிலை, தனிமைப்படுத்தல், ஊரடங்கு மற்றும் பொருளாதார முடக்கநிலை காரணமாக, சமூக பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டுள்ள வவுனியா மக்கள், மருத்துவசேவைக்காக எந்த நிலையிலும் மாவட்ட பொது மருத்துவமனையை நாடலாம்.

மருத்துவமனையானது பொதுமக்களின் சுகாதாரத் தேவைகளை நிவர்த்திசெய்வதற்கும் மேலாக சமூக அபிவிருத்தி, பொருளாதார முன்னேற்றம் மற்றும் சூழல் பாதுகாப்பு போன்றவற்றின் ஆதாரமாக செயற்படவேண்டியது அவசியமானது.

வெளிநோயாளர் பிரிவில் சாதாரணமாக சிகிச்சை பெறக்கூடிய நிலை காணப்படுகின்றது. எனவே, கொரோனா நோயாளர்களோ அல்லது கொரோனா அல்லாத பிற நோயாளர்களோ மருத்துவ ஆலோசனை தேவைப்படுவதாக உணருமிடத்து, தயக்கமின்றி, தாமதமின்றி வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு உடனடியாக வாருங்கள். - என்றார். (த110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஒரு வாரத்தில் உயர்ந்தது மரண வீதம்!




**கொழும்பு, செப். 10**

**கடந்த ஒரு வாரத்தில் கொரோனா இறப்பு வீதமானது 4.02 வீதம் அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

நாட்டில் கொவிட் தொற்று பரவலால் பதிவாகும் இறப்புக்கள் தொடர்பில் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவால் வாராந்த பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி முதல் இந்தமாதம் 3ஆம் திகதி வரையான ஒருவார காலத்தில் இறப்பு வீதமானது 4.02ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுநோயியல் பிரிவால் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை பதிவான இறப்புக்களை அடிப்படையர்கக் கொண்டு இந்தமாதம் 2ஆம் திகதி வெளியிடப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையின் அடிப்படையில் அந்த ஒரு வாரத்தில் ஆயிரத்து 386 மரணங்கள் பதிவாகியிருந்தன.

இந்த எண்ணிக்கை இனங்காணப்பட்ட தொற்றாளர் எண்ணிக்கையில் 3.51 சதவீதமாகவும் காணப்பட்டது. இது தற்போது 4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கொவிட் தொற்று முதன் முதலில் இனங்காணப்பட்ட 2020 மார்ச் 11ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி வரை 8 ஆயிரத்து 371 மரணங்கள் பதிவாகியுள்ளன. இது நூற்றுக்கு 1.98 சதவீதமாகும். எனினும் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி முதல் இந்த மாதம் 3ஆம் திகதி வரையான ஒரு வாரத்தில் 35 ஆயிரத்து 661 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்த நிலையில், ஆயிரத்து 435 மரணங்கள் பதிவாகியுள்ளன. (எ-இ)



## மன்னார் மயானத்தின் அபிவிருத்திக்கு அடிக்கல்

மன்னார்,செப்.10

மன்னாரில் பொதுமயான வேலைத்திட்டங்களுக்கு அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டப்பட்டது.

இதற்கென மன்னார் நகர சபையால் ஒரு கோடி 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நகரசபைத் தலைவர் ஞா. அன்ரனி டேவிட்சன் தலைமையில் அடிக்கல் நடப்பட்டது

அஞ்சலி மண்டபம், கிரியைகள் மண்டபம், நடைபாதைகளுக்கான கற்கள் பதித்தல், பிரார்த்தனை மண்டபத் திருத்த வேலைகள் மற்றும் மலசலகூடங்கள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொன்னம்பலம் சிறிவர்ணன், மன்னார் நகர சபைச் செயலாளர்,கணக்காளர், மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ம-4,213)



## போராடும் ஆசிரியர்களை வேட்டையாடுகிறதா அரசு?

*கேள்வி எழுப்புகின்றது எதிர்க்கட்சி*

கொழும்பு, செப். 10

சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி போராட்டம் நடத்தும் ஆசிரியர்களை ராஜபக்ச அரசு வேட்டையாடப் போகின்றதா? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட சகல அதிபர் மற்றும் ஆசியர்கள் தொடர்பான விரிவான அறிக்கைகளை அவசரகாலச் சட்ட வாக்கெடுப்புக்கு முன்னரே பொலிஸார் திரட்ட ஆரம்பித்துள்ளனர்.

ஆசிரியர்கள் விடயத்தில் அரசின் நிலைப்பாட்டைக் கல்வி அமைச்சர் மற்றும் பொலிஸார் தெளிவுபடுத்த வேண்டும். அரசு நாட்டு மக்களை ஒடுக்குவதற்காக அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றது.

போராட்டம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்கள் இன்னும் சிறைகளிலேயே உள்ளனர். அவர்களின் உயிருக்கு ஆபத்து இருக்கின்றது. நாட்டின் கல்வித்துறையை மேம்படுத்துவதற்கு இந்த அரசின் திட்டம் என்ன? ஆசிரியர்களை ஒடுக்குவதற்குப் பதிலாக, ஆசிரியர்களுக்குத் தேவையான திட்டங்களை வகுத்து, ஆசிரியர்களைக் கவனிக்க வேண்டும் - என்றார். (எ-22)

## ஆசிரியர்களின் கோரிக்கை வரவு – செலவுத் திட்டத்தில்

கொழும்பு, செப். 10



அதிபர் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை, எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசால் முன்வைக்கப்பட்ட தீர்வை ஏற்றுக் கொண்டு, தற்போது பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள அதிபர், ஆசிரியர்கள் மீண்டும் சேவைக்குச் சமுகமளிப்பார்கள் என்று நம்புகின்றோம்.

அவர்களுக்கான மேலதிக கொடுப்பனவை இந்த மாத சம்பளத்துடன் வழங்குவோம். இணைய வழியாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு, இணைய கட்டணத் தொகையாக 5 ஆயிரம் ரூபாவை வழங்கவும் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. என்றார். (ம-4)

## பொதுமுடக்க காலத்திலும் சட்டவிரோத மணல் அகழ்வு

*குடியிருப்பாளர்கள் விசனம்*

சாவகச்சேரி, செப். 10

தென்மராட்சிக் கிழக்கு கெற்பேலி ,பாலாவிப் பகுதிகளின் கடற்கரையை அண்டிய குடியிருப்புக்களுக்கு மிக அண்மையாக, தொடர்ச்சியாக சட்ட விரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


தற்போதைய பொதுமுடக்கத்தை சாதகமாகப் பயன்படுத்தி, பெருமளவு மணல் அகழப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு பல முறை தெரியப்படுத்தியும், பொலிஸார் கவனிக்கவில்லை என்று குடியிருப்பாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மணல் அகழ்வு நடைபெறும் இடத்திலிருந்து 100 மீற்றர் துரத்தில் இராணுவக் காவலரண் அமைந்துள்ளது. அதேவேளை சம்பந்தப்பட அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பதாக இல்லை. இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த பகுதிகளில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இரவில் மணல் கொள்ளை இடம்பெறும்போது, தகவல் அறிந்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் செல்வதற்கு முன்னரே, மணல் கொள்ளையில் ஈடுபடுவோர் தப்பித்துச் செல்கின்றனர் என்று பதிலளித்தார். (ம-4,159)

## மதமாற்றத்தை ஏற்படுத்த தெல்லிப்பழையில் முயற்சி

*அமைச்சருக்குக் கடிதம்*



யாழ்ப்பாணம், செப். 10

தெல்லிப்பழையில் இடம்பெறும் மதமாற்றச் செயற்பாடுகள் தொடர்பில், மறவன்புலவு சச்சிதானந்தன் கலாசார அமைச்சருக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தைப் பார்வையிட்ட தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். கடிதத்தின் பிரகாரம் தெல்லிப்பழையில் இடம்பெறும் மதமாற்றச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார். (ம-4,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பைத் தவிர்க்க தடுப்பூசி கட்டாயம்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆலோசனை

யாழ்ப்பாணம், செப். 10

**கொரோனாத் தொற்றால் ஏற்படும் இறப்புக்களைத் தவிர்க்க வேண்டுமாக இருந்தால், கட்டாயம் அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதேவேளை தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களும், தொற்றுப் பரவாது என்று அலட்சியமாக செயற்பட வேண்டாம்.**



இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் தடுப்பூசி வழங்கும் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 30 வயதுக்கு மேற்பட்ட 6 லட்சத்து 57 ஆயிரத்து 547 பேர் வடக்கு மாகாணத்தில் உள்ளனர். அவர்களில் முதலாவது டோஸ் 5 லட்சத்து 58 ஆயிரத்து 131 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவது டோஸ் இரண்டு லட்சத்து 94 ஆயிரத்து 69 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் இரண்டாவது கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் இரண்டாவது கட்டத் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இரண்டாவது தடுப்பூசி வழங்கும் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை 60 வயதுக்கு மேற்பட்டோருக்கிடையில் இறப்பு வீதம் அதிகரித்துச் செல்கின்றது. அவர்களில் தடுப்பூசி எதுவும் பெறாதவர்களே அதிகளவில் இறப்புகளைச் சந்திக்கநேரிடுகின்றது. அதன்காரணமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களை இனங்கண்டு அவர்களின் வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

தொடர்ந்து 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படும். தடுப்பூசி பெற்றவர்களுக்கு தொற்று ஏற்படும் போது, அவர்களுக்கு நோயின் தாக்கம் குறைவாகக் காணப்படுகின்றது.

நோய் அறிகுறிகள் ஏற்பட்டாலும் அவர்கள் சில நாள்களில் குணமடைந்து விடுவர். எனவே அனைவரும் தடுப்பூசியைப் பெறுவது அவசியமாகும்.

அத்துடன் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றவேண்டியது அவசியம். இயலுமானவரை பொது இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். முகக்கவசம் அணிதல் வேண்டும்- என்றார். (ம-4,26)



## வீடுகளில் முடங்கியுள்ள முதியவர்களும் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

வீடுகளில் முடங்கியுள்ள முதியவர்கள் பலரும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படும் வீதம் அதிகரித்துள்ளது. அவர்கள் தொற்றால் பாதிக்கப்பட்ட பின்னர் வீடுகளிலும், மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மூச்சுவிடுவதற்குச் சிரமப்பட்ட மந்துவிலைச் சேர்ந்த 93 வயது மூதாட்டி ஒருவர், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.

அவருக்கு மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் நீண்டகாலமாக வெளியிடங்களுக்குச் செல்லாமல் வீட்டிலேயே தங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மருத்துவமனையின் சவச்சாலையில் பெரும் இடநெருக்கடி காணப்பட்டதால், சடலத்தை உறவினரிடம் கையளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் நாளாந்தம் இடம்பெற்றாலும் கூட, வீடுகளில் தங்கியுள்ள முதியவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதற்கு, பராமரிப்பவர்கள் பின்னடிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-4,9)


## கிளிநொச்சியில் 9,672 பேருக்கு தடுப்பூசி


கிளிநொச்சி, செப். 10

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 9 ஆயிரத்து 672 பேர் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் இவர்கள் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

தற்போது தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மக்களின் ஆர்வத்தால், இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கமுடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம4,13)






## கொரோனா நீங்க நல்லூரில் யாகம்

யாழ்ப்பாணம், செப். 10

கொரோனாத் தொற்றிலிருந்து மக்கள் விடுபட வேண்டி, நல்லூர் கைலாசநாதர் வடிவாம்பிகை சிவன்கோவிலில் நேற்று மஹாயாகம் நடைபெற்றது.

கந்தசாமி கருணாகரன் ஒருங்கிணைப்பில், வடமாகாண கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் பிரதானி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடிதுவ மற்றும் வடமாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதானி [illegible] மற்றும் [illegible] கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (ம-4,20)



## முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாம் கட்டத் தடுப்பூசி

முல்லைத்தீவு, செப். 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்துப் பிரதேசங்களிலும் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு, இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன், சுகாதாரப் பிரிவினர் தடுப்பூசி மையங்களாக அறிவிக்கப்பட்ட பாடசாலைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் ஆதார மருத்துவமனைகளில் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இன்று இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நிறைவடையும் என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (ம-4,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 களஞ்சியசாலைகளில் 2,250 தொன் நெல் மீட்பு

**திருமலை, செப். 10**

**திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் நெல்லை அளவுக்கதிகமாக களஞ்சியப்படுத்தி வைத்திருந்த 16 களஞ்சியசாலைகள் பரீசிலிக்கப்பட்டன. அங்கிருந்த 2 ஆயிரத்து 250 மெற்றிக் தொன் நெல் மீட்கப்பட்டுள்ளது.**



நெல் மொத்த வியாபாரிகள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கிடையிலான கலந்துரையாடலில், மாவட்டச் செயலர் சமன் தர்சன பாண்டிகோறாள இதனைத் தெரிவித்தார். இதன்போது ஆயிரத்து 800 மெற்றிக் தொன் அளவான நெல்லை, நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்குவதற்கு உரிமையாளர்கள் விருப்பம் தெரிவித்தனர். அதேவேளை சீனி மொத்த வியாபாரி ஒருவர் தம்மிடம் இருக்கக்கூடிய சீனி இருப்புத் தொகையை நியாயமான முறையில் அனைத்து வியாபாரிகளுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் விநியோகிக்க விருப்பம் தெரிவித்தார். (ம-4-40)

பதுக்கப்பட்ட

## 60 ஆயிரம் கிலோ நெல் கைப்பற்றல்

வவுனியா, செப். 10

வவுனியாவில் இரண்டு தனியார் நெற்களஞ்சியசாலைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 60 ஆயிரம் கிலோகிராம் நெல் கைப்பற்றப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள தனியார் நெற்களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல் தொடர்பான தகவல்களை வழங்குமாறு அரசு அறிவித்திருந்தது. எனினும் அரசால் அறிவிக்கப்பட்ட கால எல்லைக்குள் குறித்த தகவல்களை வழங்காத இரண்டு நெற்களஞ்சியசாலைகளை, வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்க்ள் அதிகார ச்பை உத்தியோகத்தர்கள் சோதனையிட்டனர்.

வவுனியா தாண்டிக்குளம் மற்றும் கொறவப்பொத்தானை வீதிகளில் அமைந்துள்ள நெற்களஞ்சியசாலைகளுக்கு சீல் வைத்தனர். குறித்த களஞ்சியசாலைகளில் கைப்பற்றப்பட்ட 60 ஆயிரம் கிலோ கிராம் நெல்லை, நெல் சந்தைப்படுத்தும் சபை நிர்ணய விலையில் கொள்வனவு செய்யவுள்ளது. (ம-4-110)


## மிருகக்காட்சிச்சாலை திணைக்களத்தின் பணிப்பாளர் விலகல்

கொழும்பு, செப். 10

தேசிய மிருகக்காட்சிச்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர்நாயகம் இஷினி விக்ரமசிங்க பதவி விலகவுள்ளார் என்று அறிவித்துள்ளார்.

பணிப்பாளர்நாயகம் தமது பதவி விலகல் தொடர்பாக் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார் என்று வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார். இஷினி விக்ரமசிங்க தனிப்பட்ட காரணங்களாலேயே பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## 'சன்ஷைன்' சுத்தா கொலை: கைது செய்யப்பட்ட கணேஷ்



கொழும்பு, செப். 10

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமிழைக்கும் கும்பலைச் சேர்ந்த 'சன்ஷைன் சுத்தா' கொலை தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கொட்டுவில பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், தற்போது வெளிநாட்டுக்கு தப்பிச்சென்றுள்ள பிரபல பாதாள உலகக்குழு உறுப்பினரான ஹரக் கட்டாவுக்கு நெருக்கமானவர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

கணேஷ் என்ற பெயரில் அறியப்படும் இந்தச் சந்தேகநபர், சன்ஷைன் சுத்தா கொலைக்கு ஒத்தாசை புரிந்த குற்றச்சாட்டில் வெலிகம உடுகாவ பிரசேத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின், மாத்தறை மெதவத்த காரியாலயத்தில் பணியாற்றிவரும் 43 வயதான ஒருவரென கொட்டுவில பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## சிறுநீரகங்கள் செயலிழந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, செப். 10

சிறுநீரகங்கள் உள்ளிட்ட உடற்பாகங்கள் செயல் இழந்த நிலையில், குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபர், யாழ். போதான மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். மாணிக்கபுரம் விசுவமடுப் பகுதியைச் சேர்ந்த 28 அகவையுடைய குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்த நிலையில், மதுபோதைக்கு அடிமையாகியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது., (ம-4-19)

# பொலனறுவை அரிசி ஆலைகளில் அரிசியை கையகப்படுத்திய அரசு

கொழும்பு, செப். 10

பொலனறுவை பிரதேசத்தில் பெரியளவில் நடத்தப்படும் அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் வசம் காணப்பட்ட பெருந்தொகையான அரிசியை அரசுடைமையாக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆறு அரிசி ஆலைகளில் காணப்பட்ட அரிசியைக் கையகப் படுத்தும் நடவடிக்கை, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல மற்றும் நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பொலனறுவை பிரதேசத்தில் பெரியளவில் நடத்தப்படும் அரிசி ஆலைகளிலிருந்து சந்தைக்கு விநியோகிக்கப்படாத அரிசி, அரசின் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கையகப்படுத்தப்பட்டதை அடுத்து, அவற்றை சதொச கூட்டுறவு விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.



இந்த அரிசித் தொகை [illegible] பொதுமக்களை உடனடியாகச் சென்றடைய வேண்டும் என்பதே, அரசின் நோக்கமாகும்.

அரசால் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டதை அடுத்து, போதுமானளவு உற்பத்தித் தொகையைப் பேணவும் எவ்விதப் பற்றாக்குறையுமின்றி சந்தைக்கான அரிசியை விநியோகிப்பது தொடர்பிலும், அரிசி ஆலை உரிமையாளர்களுடன், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம் பேச்சு நடத்தியிருந்தது.

இருப்பினும், அவர்கள் இணங்கிய விதத்தில் நடந்துகொள்ளாமையால், அந்த அரிசி ஆலைகளில் காணப்பட்ட அரிசியைக் கையகப்படுத்தி விநியோகிக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவால் ஆலோசனை வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பிரபல பாடகர்களுக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு,செப்.10

பிரபல பாடகர்களான நுவன் குணவர்தன மற்றும் அவரது மகன் கயான் குணவர்தன ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை பாடகரும் நடிகருமான கயான் குணவர்த்தன, தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். குடும்பத்தாருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் இவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நுவன் குணவர்தன மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவருகின்றார். நானும் தாயாரும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம் என்றும் அவர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மடியில் கனமிருந்தால்......!

"கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான தலைவரான பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சம்பந்தன், விக்னேஸ்வரனுக்குச் சமனானவர். ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தை சர்வதேசத்திடம் பேராயர் கொண்டுசென்றால் திருச்சபையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சமனானதாக மாறிவிடும். பேராயர் நாட்டுக்கு துரோகமிழைப்பதால் அவர் ஒரு தேசத்துரோகி" என்று விமர்சித்துள்ளது நவ சிங்கள ராவய என்ற கடும்போக்குடைய இனவாத அமைப்பு.


பிரதமர் மஹிந்த ராஜபக்ச விரைவில் இத்தாலிக்குப் பயணமாகவுள்ளார். இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக அவர் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்ஸிஸைச் சந்திக்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று முன்னர் தகவல்கள் வெளியாகி இருந்தன. இந்தச் சந்திப்பின்போது, இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இலங்கை அரசு முன்னெடுத்த நீதிப்பொறிமுறை தொடர்பில் பிரதமர் பாப்பரசருக்கு விளக்கமளிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்குக் கண்டனம் வெளியிட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, "குறித்த தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் அரசு முன்னெடுக்கும் இந்த நிகழ்ச்சிநிரல் இலங்கை மக்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுவிட்டது என்றும் அரசு இந்த விடயத்தில் இதய சுத்தியுடன் நடந்துகொள்கின்றது என்பதுமான பிம்பத்தைத் தோற்றுவிக்கும். அதற்கு அனுமதிக்க மாட்டோம்" என்று கண்டித்திருந்தார். இந்த நிலையில் பாப்பரசரை பிரதமர் மஹிந்த சந்திக்க மாட்டார் என்று இப்போது உறுதியாகிவிட்டது. பேராயரின் எதிர்ப்பின் காரணமாகவே பிரதமர் மஹிந்தவைச் சந்திக்க பாப்பரசர் சம்மதிக்கவில்லை.

பேராயரின் இந்தத் தார்மீகக் கோபத்துடனான நடவடிக்கை தொடர்பில் கருத்து வெளிப்படுத்துகையிலேயே பேராயரை தேசத்துரோகியாக சித்திரித்துள்ளார் நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலர் சுதத்த தேரர். "பேராயர் ஒரு நிகழ்ச்சி நிரலின் பின்னால் இயங்குகின்றார், இந்த விவகாரத்தை சர்வதேச மயப்படுத்தினால் அனைவரும் தேசத்துரோகிகள் என்றே பார்க்கப்படுவர்" என்பனவும் தேரரின் முக்கிய இரு குற்றச்சாட்டுக்களாக அமைந்துள்ளன.

ஒரு விடயத்தை தேரர் புரிந்துகொள்ள வேண்டும். எந்த அரசியல் நிரலுக்கும் உட்பட்டுச் செயற்பட வேண்டிய அவசியம் 'தற்போது' பேராயருக்குக் கிடையாது. இன்னும் சொல்லப்போனால் ராஜபக்சக்களை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரும் வகையிலும், அவர்களை ஆதரிக்கும் வகையிலும்தான் கர்தினாலின் கடந்தகாலச் செயற்பாடுகள் அமைந்திருந்தன. கோத்தாபய ராஜபக்ச தேர்தல் அரசியலில் ஈடுபடுவதற்கும் ஜனாதிபதியாக முடிசூடுவதற்கும் ஈஸ்டர் தாக்குதல் வலுவான பின்னணியை வழங்கியது. இந்தத் தாக்குதலுக்கான நீதி, மற்றும் இப்படிப் பிறிதொரு தாக்குதல் நடவாமை என்பனவே கோத்தாபயவின் தேவையை நாட்டுமக்களுக்கு வலியுறுத்தின. ஆனால், எந்த நோக்கத்துக்காக கோத்தாபய கொண்டுவரப்பட்டாரோ அதை அவர் நிறைவேற்றவில்லை. எனவே, இலங்கைக்கான கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் என்ற அடிப்படையில் தன் மக்களுக்கு நீதியை வழங்குவதில் பேராயர் கொண்டுள்ள முனைப்பு, கொள்கை சரியானதுதான்.

அத்துடன், தாக்குதல் நடந்து 28 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் நீதி என்பது தாமதிக்கப்படுவதாகவும் மறுக்கப்படுவதாகவும்தான் இங்கே அமைந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் திருப்திப்படும் வகையிலான நீதி வழங்கப்பட்டிருந்தால் எதற்காக சர்வதேசத்தை நாட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கப் போகின்றது என்ற குறைந்தபட்ச யதார்த்தத்தை தேரரும் அவர் சார்ந்த சமூகமும் சிந்திக்கவேண்டும்.

அதுபோக, அரசு இதய சுத்தியுடன் செயற்பட்டால், அரசின் பாதையில் தவறில்லை என்றால் சர்வதேசத்தை யார் நாடினாலும் என்ன நடந்துவிடப் போகின்றது? மடியில் கனமிருந்தால் வழியில் எப்போதும் பயம் இருக்கத்தான் செய்யும்.



# 6 மின்தகன மயானங்களை வடக்கில் அமைக்க அனுமதி

**முல்லைத்தீவு, செப். 10**

**வடக்கு மாகாணத்தில் உடனடியாக 6 மின்தகன மயானங்களை அமைப்பதற்கு, மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.**

கொரோனாத் தொற்றுக் காரணமாக இறப்புக்கள் அதிகரித்துள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள். தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக்டிரஞ்சன் தலைமையில் நேற்று முன்தினம் அவசரமாக ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

அதற்கமைவாக வடக்கு மாகாணத்தில் மேலும் 6 மின்தகன மயானங்களை அமைப்பதற்கு, 6 பிரதேச சபைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிதி வல்லமை மற்றும் திட்ட விருப்பம் இருந்தால் சபைகள் உடனடியாக பணிகளை முன்னெடுக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு மற்றும் நல்லூர் பிரதேச சபைகளுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச சபைக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்கும், மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபைக்கும் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவிக்கையில்,


சபையின் வைப்பில் நிதி உள்ளது. எதிர்வரும் 16ஆம் திகதி சபை அமர்வில் பிரேரணை முன்வைக்கப்பட்டு சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் மின்தகன மயானத்தை அமைக்கத் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார்.

(ம-4,19)

# மின்சாரத் தகனத்துக்காக சடலங்கள் காத்திருப்பு

முல்லைத்தீவு, செப். 10

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள். மின்சாரத் தகனத்துக்காக முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் தேக்கமடைந்துள்ளன என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு மின்சாரம் மூலம் எரியூட்டப்படுகின்றன.

அதேவேளை கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலிருந்தும் சடலங்கள் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. தற்போது வவுனியாவிலும் இறப்புக்கள் அதிகரித்துள்ளதால், சடலங்களை எரிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. அங்கு சுழற்சி முறையிலேயே சடலங்கள் எரியூட்டப்படுகின்றன. அதனால் மாவட்ட மருத்துவமனைகளில் சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் வரை முல்லைத்தீவு மருத்துவமனையில் 7 சடலங்கள் தேக்கமடைந்துள்ளன. இந்த நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்கு, முல்லைத்தீவு மாவட்டத்தில் மின்சாரம் மூலம் சடலங்களை எரிப்பதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(ம-4,13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினைகளை நீக்கும் ஆவணிச் சதுர்த்தி



சிவரம்யா

ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தியில் கொண்டாடப்படும் விரதம் விநாயக சதுர்த்தி எனப்படும். 'வி' என்பதற்கு இல்லை என்னும் பொருள் உண்டு. விநாயகர் என்றால் தனக்கு மேல் நாயகன் (தலைவன்) இல்லை என்னும் பொருள் தருவதாகும். இப்பெருமான் யானை முகம் கொண்டவர். நாம் எதனை எழுதத் தொடங்கினாலும் முதலில் பிள்ளையார் சுழி இடாமல் தொடங்குவதில்லை.

"மூஷிக வாஹன ...."

"விநாயகப் பெருமானே ! எலியை உமது வாகனமாகக் கொண்டு, கை கொழுக்கட்டையுடன் , நீண்ட தும்பிக்கை மற்றும் அகன்ற காதுகளுடன் குறுகிய உருவத்தில் சிவனார் மைந்தனாக எல்லா விக்கினங்களையும் நீக்கும் உமது திருப்பாதங்களை நான் வணங்குகிறேன்"

இது விநாயகரின் ஜன்ம தினமாகும். விநாயகருக்கு மிகவும் உகந்த நாள் இது.

*"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்*
*கண்ணிற் பணிமின் கனிந்து"*

விநாயகரை வழிபட்டால் முத்தி சித்திக்கும் என்ற கருத்துடையது மேலே குறிப்பிட்ட கபிலதேவ நாயனார் பாடல்.

மாதந்தோறும் வருகின்ற பூர்வபட்ச சதுர்த்தி நாள்கள் விநாயகரை மகிழ்விக்கும் விரதநாள்களாகும். மாதந்தோறும் விரதம் இருக்க விரும்புவோர் ஆவணிச்சதுர்த்தியில் ஆரம்பிக்க வேண்டும்.

விநாயகரின் பிறப்பைப் பற்றியும், யானைமுகம் அவருக்கு எப்படி வந்தது என்பதைப் பற்றியும் கதை ஒன்று சொல்லப்படுகிறது. ஒரு சமயம் சிவபெருமானின் தேவியான கௌரிமாதா குளித்துக்கொண்டிருக்கையில் தனது உடலிலிருந்தே தூய வெள்ளை நிறத்தில் கணேசப்பெருமானை செய்து , வீட்டு வாயிலில் அவரை வைத்தார். உள்ளே தான் குளித்துக் கொண்டிருக்கையில் எவரையும் அனுமதிக்கக்கூடாது என்று அவள் கணேசரிடம் கூறினாள். மிகுந்த தாகத்துடன் வீட்டுக்குத் திரும்பி வந்த சிவபெருமானை கணேசர் வாசலிலேயே தடுத்து நிறுத்தி விட்டார். கோபம் கொண்ட சிவன், கணேசரை யாரோ அயலார் என நினைத்து அவரது கழுத்தை வெட்டி விட்டார். இதை அறிந்த கௌரி மிகவும் வருத்தப்பட்டாள். அவளை சமாதானப்படுத்தும் விதத்தில், வடக்கு நோக்கித் தலைவைத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் உயிரினத்தின் தலையைக் கொய்து கொணருமாறு தனது சேவகர்களுக்கு சிவன் உத்தரவிட்டார். சேவகர்களும் தங்களுக்கு இட்ட பணியை நிறைவேற்ற சென்ற பொழுது , ஒரு யானை வடக்கு நோக்கித்தலைவைத்துத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டனர். உடனே அதன் தலையைக் கொய்து சிவனிடம் சமர்ப்பித்தனர். சிவபெருமான் கணேசரது உடலுடன் யானைத் தலையைப் பொருத்தினார்.

திருமணங்கள், பயணங்கள் , வித்யாப்யாசம் போன்ற அனைத்து நிகழ்ச்சிகளின் ஆரம்பத்திலும் தமது மகன் வழிபடப்பட வேண்டும் என அவர் ஏற்பாடு செய்தார். இதிலிருந்து விநாயகர் சதுர்த்தி வழிபாடு ஏற்பட்டது.

"ஓம் கம் கணபதயே நம" என்பது அவருக்குரிய மந்திரம்' மேலும் "ஓம் ஸ்ரீகணேசாய நம" என்பதும் உச்சரிக்கப்படுகிறது. கணேச பக்தர்கள் கணேச காயத்ரி மந்திரத்தையும் ஜபிக்கிறார்கள்.

*"தத் புருஷாய வித்மஹ*
*வக்ரதுண்டாய தீ மஹி*
*தன்னோ தந்தி ப்ரசோதயாத்!"* ஞானம் மற்றும் ஆனந்தத்தின் உருவகம் கணேசப்பெருமான் பிரம்மச்சாரிகளில் அவரே முதல்வர். ஒரு சிறிய எலியே அவரது வாகனம். மூலாதார சக்கரத்தின் தெய்வம் அவரே. உடலில் குண்டலினி சக்தி உறையும் மானஸீக கேந்திரம் இது.

விநாயகர் சதுர்த்தியானது தமிழ்நாட்டில் விமரிசையாக கொண்டாடப்படுகின்றது. வட இந்தியாவில் இதனை "கணேச பூசை" என்றழைக்கின்றனர். பத்து நாள்கள் சிறப்பாகக் கொண்டாடி கடைசி நாளன்று விநாயகர் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று தண்ணீரில் கரைப்பர்.

இந்த நாளில் வீட்டை நன்றாகத் தூய்மை செய்து கோலமிட்டு செம்மண் பூசி அலங்கரிக்க வேண்டும். வாயிலில் மாவிலை, குருத்தோலைத் தோரணங்கள் அழகாகக் கட்டல் இடம்பெறும். கும்பங்களை முறைப்படி ஸ்தாபித்து பூசைகளை நடத்தலாம். ஆலய அர்ச்சகரை அழைத்து இந்தப் பூசையை செய்விக்கலாம். கிரியை, பூசை, தீபாராதனை நமஸ்காரங்கள் செய்யப்படும். விசேட நிவேதனங்களாக அறுசுவை உணவும், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், மோதகம், அப்பம், கொழுக்கட்டை, அவல் என்பன படைக்கப்படும். மேலும் களிமண்ணாலே பிள்ளையார் செய்து பூசை செய்தால் அதுவே சிறப்பு. மஞ்சள், சந்தனம், புற்றுமண், சாணம் ஆகியவற்றைக் கொண்டு பூசிக்கலாம்.

இந்நாளை அனுஷ்டித்ததன் பலனால் தமயந்தி, நளனை மீண்டும் அடைந்தாள், இராமன் சீதையை மீட்டுக்கொண்டான், இந்திரன் அசுரர் பகையை வென்றான் என்பது வரலாறு.

"விநாயகரைத் துதிப்போமாக "!

## நல்லைக்குமரன் மலர் வெளியீடு இவ்வருட இறுதிக்குள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப் 10

கொரோனாத் தொற்று நிலைமையால் இந்த வருடத்துக்கான நல்லைக்குமரன் மலர் வெளியீடு மற்றும் விருது வழங்கல் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது என்று யாழ் மாநகர சபை ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுத்தலைவருமான இ.த.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுகாதார நடைமுறைகளின் கீழ் சைவசமய விவகாரக்குழுவுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது பொதுமுடக்கம் முழுமையாக நீக்கப்பட்டு, தொற்று நிலை தணிந்து, சுகாதார நடைமுறைகளின் படி ஆகக்குறைந்த பங்குபற்றுநர்களுடன் ஒன்றுகூடல்களை நடத்தும் நிலை ஏற்பட்டால் மலர் வெளியீட்டையும் கௌரவிப்பு நிகழ்வையும் ஒன்றாக நடத்துவது எனவும், இந்த வருட இறுதி வரை அவ்வாறானதொரு சுமுகமான சூழ்நிலை ஏற்படாதவிடத்து நிகழ்வுகளை சூம் செயலி மூலமாகவும், தொலைக்காட்சி நேரலையூடாக சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாகவும் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## பேராயர் தேசத்துரோகியாம்

### *சிங்கள ராவயவின் கண்டுபிடிப்பு*

கொழும்பு, செப். 10

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலால் கொல்லப்பட்ட மக்களைப்பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் அரசியல் நிகழ்ச்சி நிரலை உடன் மீளப்பெறவும். ஜனாதிபதி பேராயரை சந்திப்புக்கு அழைத்துள்ளார். எனினும் அவரது அழைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் அரசியல் உள்நோக்கம் இருப்பது தெளிவாகின்றது. ———

இவ்வாறு நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்த சுதத்த தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

அரச தலைவர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கும், மாநாடுகளில் உரையாற்றுவதற்கும் பேராயரின் அனுமதி தேவையா?. 21/4 தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொய்யுரைத்து, விசாரணைகளை மூடிமறைக்கும் நோக்கிலேயே பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் இத்தாலி மற்றும் வத்திக்கானுக்கு செல்கின்றனர் என்பது எப்படி பேராயருக்குத் தெரியும். நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை பேராயர் உருவாக்கிக்கொண்டிருக்கின்றார். அத்தகைய நடவடிக்கைகளை அவர் நிறுத்தவேண்டும்.

இந்தப் பிரச்சினையை சர்வதேச அமைப்புகளிடம் கொண்டு செல்வதற்கு பேராயர் மற்றும் கத்தோலிக்க சபை நடவடிக்கை எடுக்குமானால், பேராயர் என்பவர் சம்பந்தன், விக்னேஸ்வரனுக்கு சமனானவராகி விடுவார். கத்தோலிக்க சபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நிகராகிவிடும். தான் பிறந்த மண்ணுக்கு துரோகம் இழைப்பவர்களைத் தேசத்துரோகி என்றே விளிக்க வேண்டும் - என்றார். (ம-4,44)

## கை, கால் கட்டப்பட்டு வீதியில் பெண் மீட்பு!

கொழும்பு, செப். 10

அம்பாறை, தமன, சீனவத்த பிரதேசத்திலுள்ள வீதியொன்றில் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவர் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளை, கடந்த 27 ஆம் திகதி தனது மகள் கடத்தப்பட்டார் என்று அந்தப் பெண்ணின் தாய், வென்னப்புவ கந்தானகெதர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். நேற்றுமுன்தினம் காலை அந்தப் பெண், கை, கால்கள் கட்டப்பட்டு வீதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார். மீட்கப்பட்ட பெண் சிகிச்சைகளுக்காக அம்பாறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் தரப்பின் ஆலோசனைகளை இனியும் நிராகரித்துச் செயற்படோம்

## அரசு அறிவிப்பு



**கொழும்பு, செப். 10**

**சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைகளை அரசு இனி நிராகரிக்காது. அவர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே நாட்டையும் முடக்கினோம். இனியும் அவ்வாறே செயற்படுவோம்.**

என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது சுகாதார அமைச்சின் கொவிட் தொடர்பான தொழில்நுட்பக் குழுவிலிருந்து விசேட மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம பதவி விலகியமை தொடர்பில் கேள்வி எழுப்பட்டது. அதற்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

பதவி விலகலுக்கான காரணத்தை சம்பந்தப்பட்ட மருத்துவரிடம் தான் கேட்டறிய வேண்டும். கொரோனா ஒழிப்பு நடவடிக்கைக்கு குறித்த மருத்துவர் உட்பட சுகாதாரத்துறையினர் பங்களிப்பு வழங்கினர். அதேபோன்று இராணுவமும் ஒத்துழைப்பு வழங்கியது. சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனையின் பிரகாரமே இதுவரை அரசு செயற்பட்டது. நாட்டில் தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முழுமையாக நிறைவுபெறும். அதன்பின்னர் இரண்டு வாரங்களில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். எனவே, விரைவில் தொற்றாளர்கள் மற்றும் இறப்பவர்களின் எண்ணிக்கை குறைவடையும். -என்றார். (ம-4-44)

# தடுப்பூசி ஏற்றலில் இலங்கை மைல்கல்

கொழும்பு, செப். 10

கொவிட்- 19 தடுப்பூசி ஏற்றலில் இலங்கை 12 மில்லியன் மைல் கல்லை எட்டியுள்ளது.

இலங்கையில் இதுவரை 12 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு தடுப்பூசிகளின் முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் 30 வயதுக்கு மேற்பட்ட மொத்த மக்கள் தொகையில் சுமார் 100 சதவீதம் பேருக்கு குறைந்த பட்சம் முதல் டோஸ் கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தரவுகள் கூறுகின்றன.

30 வயதுக்கு மேற்பட்ட நாட்டின் மக்கள் தொகையில் 84 சதவீதம் பேருக்கு தடுப்பூசியின் 2 ஆவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 9.7 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தடுப்பூசியின் இரண்டாவது டோஸையும் பெற்றுள்ளனர். 20-30 வயதுக்கு உட்பட்ட மொத்த மக்கள் தொகையில் 44 சதவீதத்துக்கும் அதிகமானோருக்கு குறைந்தபட்சம் கொரோனாத் தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 5,040 சுற்றுலாப் பயணிகள்!



கொழும்பு, செப். 10

கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 5 ஆயிரத்து 40 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்த வருடத்தில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை இதுவாகும்.

கடந்த மே மாதம் ஆயிரத்து 497 சுற்றுலாப் பயணிகளும், ஜூன் மாதம் ஆயிரத்து 614 சுற்றுலாப் பயணிகளும், ஜூலை மாதம் 2 ஆயிரத்து 429 சுற்றுலாப் பயணிகளும் வந்திருந்தனர்.

சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தால் முன்னெடுக்கப்படும் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வந்த அவர்கள் கொவிட் தொற்றுக்கான சுகாதார வழிகாட்டல்களுக்கமைய பரிசோதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் கனடாவில் இருந்து அதிகளவானோர் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜேர்மனி, பிரித்தானியா, பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதேவேளை, முழுமையாகத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட இந்தியப் பிரஜைகளுக்கு இலங்கை வருவதற்கு வாய்ப்பளிக்கும் வகையிலான வேலைத் திட்டமொன்று கடந்த ஓகஸ்ட் 24 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு முன்பு இந்தியாவிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

# நோயெதிர்ப்புக் கட்டமைப்பை இலகுவாகக் கடக்கும் டெல்டா

## ஆய்வில் கண்டுபிடிப்பு

கொழும்பு, செப். 10

வீரியம் மிக்க பரவல் தன்மையுடைய டெல்டா வைரஸ் திரிபானது, முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக் கொண்டவர்களுக்கும் தொற்றக்கூடிய நிலை உள்ளது என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இந்தப் புதிய ஆய்வு தொடர்பாக விவரங்களை 'நேச்சர்' சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

டெல்டா திரிபானது, மனிதர்களின் நோய் எதிர்ப்புக் கட்டமைப்பைக் கடந்துசெல்லக்கூடியது என அதில் மீண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை மேற்கோள்காட்டி கருத்துத் தெரிவித்துள்ள ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல் துறைப் பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர, டெல்டா கொரோனா திரிபுக்கு, இவ்வாறாக நோய் எதிர்ப்புக் கட்டமைப்பை கடந்து செல்லக்கூடிய ஆற்றல் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசி ஏற்றிய பின்னரும், கொரோனாத் தொற்று உறுதியாவதைத் தவிர்ப்பதற்கு, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)



# ஜன சுவய திட்டத்தின் கீழ் மருத்துவ உபகரணங்கள்

கொழும்பு, செப். 10

'ஜன சுவய' கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சமூக நலத்திட்டத்தின் 25ஆவது கட்டமாக 30 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருத்துவமனை உபகரணங்கள் கேகாலை மாவட்ட போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் வை.எப்.சமரசிங்கவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு சுகாதார ரீதியாக நிவாரணங்களை வழங்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குழு, அமைப்பாளர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிநாட்டுக் கிளைகள், உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்கள் 'ஜன சுவய' கருத்திட்டத்தில் இணைந்து கொண்டு "எதிர்க்கட்சியிலிருந்து ஒரு மூச்சு' நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர்.

இதற்கு முன்னர் 24 கட்டங்களாக 719 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவமனை உபகரணங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)



# தேசிய பசுமை இயக்கத்தால் 250 குடும்பங்களுக்கு உதவி

கிளிநொச்சி.செப்.10

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால், கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 250 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பளை, பரந்தன், பிரமந்தனாறு, தருமபுரம், கனகாம்பிகைக்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 250 குடும்பங்களுக்குப் பொதிகள் வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் நேரடியாகச் சென்று பொதிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்டிக் பொருள்களுக்கு விரைவில் வருகின்றது தடை

**கொழும்பு, செப். 10**

**தற்போது தடைவிதிக்கப்பட்டிருக்கும் பிளாஸ்டிக் பொருள்களுக்கு மேலதிகமாக இன்னும் 7 வகையான பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை விதிக்கும் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சட்டமா அதிபரின் பரிந்துரை கிடைத்தவுடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும். கடந்த வாரம் கூடிய அமைச்சரவை, ஒரு தடவை மட்டும் பயன்படுத்தி அப்புறப்படுத்தும் மேலும் ஏழு பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தி மற்றும் விற்பனை, விநியோகத்திற்கு தடை விதிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

பிளாஸ்டிக் ஸ்ரோ, முள்ளுக் கரண்டி, கரண்டி, பானக் கோப்பை, கத்தி, இடியப்பத் தட்டு மற்றும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீனால் செய்யப்பட்ட பூமாலைகள் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கும் வர்த்தமானி அறிவிப்பே வெளியாகவுள்ளது - என்றார். (எ-இ)



# ஆளுநர் பதவியை ஏற்பதற்குத் தயார்

## *அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 10

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ஏற்க நான் தயார். ஜனாதிபதியின் வேண்டுகோளின் பிரகாரம் விரைவில் மத்திய வங்கி ஆளுநராகப் பதவியேற்கவுள்ளேன் இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளதையடுத்து, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, 'மத்திய வங்கியின் ஆளுநர்' பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எனக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அதையடுத்து நான் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும், இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்தும் இராஜிநாமா செய்யவுள்ளேன். எனது இராஜிநாமாவுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளேன். நாட்டில் ஏற்பட்டுள்ள, பொருளாதார மற்றும் தொழில்துறை பிரச்சினைகளைத் தீர்க்க எமக்கு முழுமையான வாய்ப்புக் கிடைத்துள்ளது - என்றார்.

2006ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையில் அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-22)



# இலங்கையின் அபிவிருத்திக்கு தாய்லாந்து முழு ஒத்துழைப்பு

## *தாய்லாந்துப் பிரதமர் இலங்கைத் தூதுவருக்கு உறுதி*

கொழும்பு, செப். 10

இலங்கையின் அபிவிருத்திக்கு தாய்லாந்து தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று தாய்லாந்தின் பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் பிரயுத் சான்ஓசா இலங்கைத் தூதுவர் சமிந்த கொலன்னவிடம் தெரிவித்தார்.

இவர்கள் இருவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே தாய்லாந்துப் பிரதமர் இலங்கைத் தூதுவரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல நூற்றாண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையேயான தேரவாத பௌத்த மரபுகளில் ஆழமாக வேரூன்றிய நட்பு மற்றும் ஒத்துழைப்பின் சிறந்த பிணைப்புக்களை இருவரும் நினைவு கூர்ந்தனர்.

குறிப்பாக புதிய இயல்பான சூழலில், ஏற்றுமதி, முதலீடு ஆகியவற்றில் இலங்கை மற்றும் தாய்லாந்துக்கு இடையேயான மேம்பட்ட ஒத்துழைப்பை வலியுறுத்தி, இருதரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுக்களை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை இருவரும் ஏற்றுக்கொண்டனர் - என்றுள்ளது. (ம)

# ஆப்கான் ஊடகவியலாளர்களுக்கு இலங்கையில் தஞ்சம் கொடுங்கள்

## *ஊடக அமைப்புக்கள் கோரிக்கை*

ஆப்கான் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பாரதூரமானதும், அபாயகரமானதுமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு இலங்கையில் அடைக்கலம் கொடுப்பது அவசியம் என்று ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

பல வருடங்களாக புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு இலங்கை அடைக்கலம் கொடுத்துள்ளது. ஆப்கானிஸ்தானில் தற்போது உயிர் அச்சுறுத்தலில் உள்ள ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தயாராகி வருகின்றனர்.

இந்தத் தருணத்தில் இலங்கையும் மனித உரிமைகள் மற்றும் அகதிகளுக்கு உதவிக்கரம் அளித்தல் தொடர்பில் உறுதியாக உள்ளது என்பதை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்ட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அரசு சாதகமான பதிலை வழங்க வேண்டும் என்றும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ம-4)

# மலையக மக்களின் இருப்பை சிதைக்க அரசு தீவிர முயற்சி

கொழும்பு, செப். 10

மலையக மக்களின் இருப்பைச் சிதைத்து, வாழ்வாதாரத்தை அழித்து, அவர்களை அடிமைகளாக வைத்துக் கொள்வதற்கான நகர்வையே தற்போதைய அரசு முன்னெடுத்து வருகின்றது. இதனை முறியடிக்க அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் மோசமான தீர்மானங்களை எடுத்து, அவற்றுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு அரசு முற்படுகின்றது. குறிப்பாக மலையக சமூகத்துக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய முடிவுகளும் எடுக்கப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் என்ற போர்வையில், தோட்ட அபிவிருத்திச் சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள தோட்டக் காணிகள் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளன. இதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளது.

தோட்டப்பகுதிகளில் உள்ள காணிகள் எமது மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கையை நல்லாட்சியின் போது நாம் முன்னெடுத்தோம். தோட்ட தொழிலாளர்களை சிறு தோட்ட உரிமையாளர்களாக்குவதற்கான திட்டத்தையும் வகுத்தோம். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்திருக்கலாம். அதனை விடுத்து எம்மவர்களை தொடர்ந்தும் நாள்கூலிகளாக வைத்திருப்பதற்கும், அடிமைகளாக நடத்துவதற்குமே முயற்சி எடுக்கப்படுகின்றது.

காணி அபகரிப்புகளைத் தடுத்து, எமது மக்களுக்கு ஆளுங்கட்சியிலுள்ள பிரதிநிதிகள் தீர்வைப் பெற்றுத்தருவார்கள் என்று நம்ப முடியாது. எனவே மலையக மக்களின் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கு அனைவரும் ஓரணியில் திரளவேண்டும்.



இளைஞர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், ஆசிரியர்கள் உட்பட சமூகத்தை நேசிக்கும் அனைவரும் சமூகத்தின் இருப்பைக் காக்க ஒன்றுபடவேண்டும். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தியாக, தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைமைத்துவத்தை வழங்கும். என்றார். (ம-4,44)

# பொப்மாலி கைது

கொழும்பு, செப். 10

பொலிஸாரால் தேடப்பட்ட பொப்மாலி என்றழைக்கப்படும் களுத்துறை சந்தித தாப்ருவே என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். பேருவளை கடலில் 288 கிலோ 644 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டனர். இந்தப் போதைப்பொருளை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு பிரதான காரணகர்த்தாவாக பொப்மாலி செயற்பட்டுள்ளார்.

அதனையடுத்து அவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்த நிலையில், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுகாதாரத்துறையினருக்கு வர்த்தகர் சங்கம் உதவி

**முல்லைத்தீவு, செப். 10**

**புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தில் இணைந்துள்ள சுகாதாரத் துறையினருக்கு, புதுக்குடியிருப்பு வர்த்தகர் சங்கத்தினர் உதவி வழங்கியுள்ளனர்.**

புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை, தேவிபுரம் ஆரம்ப சுகாதார நிலையம், மூங்கிலாறு ஆதார மருத்துவமனை, பாரதிபுரம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் தற்போது முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இங்கு மக்களுக்காக சேவையாற்றிக் கொண்டிருக்கும் சுகாதாரத் துறைப் பணியாளர்களின் நலன் கருதி, அவர்களுக்குத் தேவையான குளிர்பானங்கள், தண்ணீர்ப் போத்தல்கள் என்பவற்றை வர்த்தகர் சங்கத்தினர் வழங்கியுள்ளனர்.




வர்த்தகர் சங்கத்தினர், புதுக்குடியிருப்பு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி எம்.கெங்காதீஸ்வரன் ஆகியோர் அவற்றைக் கையளித்தனர். (ம-4,19)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு திம்பிலி நகரப்பகுதியைச் சேர்ந்த 76 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. அவுஸ்திரேலியா சிட்னி நகரில் வசிக்கும் மக்கள் இணைந்து இவ் உதவியை வழங்கினர். (ம-4)

## புலம்பெயர் மக்களால் ரூ.10 லட்சம் நிதியுதவி

முல்லைத்தீவு, செப்.10

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் பொருண்மியம் நலிந்த குடும்பங்களின் நலனைக் கருத்தில் கொண்டு, லண்டன் வாழ் புதுவை உறவுகளால் 10 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசு கேதீஸ்வரன், ஆ.தர்மலிங்கம் இன்பவரன், இ.கிருஷ்ணபிள்ளை அமுதலிங்கம், ஈ. சபாரத்தினம் குணேஸ்வரன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் பத்து லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக தலா இரண்டாயிரம் ரூபா வீதம் 500 குடும்பங்களுக்கு நிதியுதவி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. (ம-4,19)



## 40 கர்ப்பிணிகளுக்கு உணவுப் பொருள்கள்

கிளிநொச்சி, செப்.10

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 40 கர்ப்பிணிகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப் பட்டன. பேர்ள தேத்தம்மாவின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, பேர்ள தேத்தம்மா அறக்கட்டளையினரால் சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

கர்ப்பிணிகளுடன், சிறு குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கும், முதுமையில் தனியாக உள்ள 10 குடும்பங்களுக்கும் உணவுப்பொருள்கள் வழங்கப் பட்டன.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், பிரதேச சபை உறுப்பினர்களான கஜன், ரமேஸ் ஆகியோர் பயனாளிகளுக்கு பொருள்களை வழங்கினர். (ம-4,13)

## 100 குடும்பங்களுக்கு பேரவை உதவிக்கரம்

முல்லைத்தீவு, செப்.10

முடக்க நிலையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள 100 குடும்பங்களுக்கு புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவையால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப் பட்டன.

2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் மல்லிகைத்தீவு, கோம்பாவில், புதுக்குடியிருப்பு மேற்கு, மன்னாகண்டல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங் கப்பட்டன.

இதற்கான நிதி உதவியை வெளிநாட்டில் வாழ்கின்ற புதுக்குடியிருப்பு வாழ் உறவுகள் வழங்கியுள்ளனர். (ம-4,115)





## இளைஞர் சேவை மன்றத்தால் உறுப்பினர்களுக்கு நிவாரணம்

கிளிநொச்சி, செப்.10

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவை மன்றத்தால், சம்மேளன உறுப்பினர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மன்றத்தால் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப் படும் 'துருணு அத்வெல' சமூக பராமரிப்பு வேலைத் திட்டத்துக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்டத்தி லுள்ள நிர்வாக உறுப்பினர்களுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங் கப்பட்டன.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் அடங்கலாக 5 இளைஞர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

மாவட்ட உதவிப் பணிப்பாளர், பிரதேச மட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், தேசிய சம்மேளனப் பிரதிநிதிகள், மாவட்ட சம்மேளனத் தலைவர் ஆகியோர் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்கினர். (ம-4,6)



## 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

புதுக்குடியிருப்பில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு, தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

பிரிட்டனில் உள்ள புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் கைவேலி, திம்பிலி, சிவநகர், மன்னாகண்டல், வேணாவில், நேசன்குடியிருப்பு, கோம்பாவில், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு கிழக்கு மற்றும் மந்துவில் பகுதிகளைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்குப் பொதிகள் வழங்கப்பட்டன.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் உப தவிசாளர் க.ஜனமேஜயந்தின் ஒழுங்குபடுத்தலில் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-4,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்ஜூன் படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ்

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகைகளில் ஒருவரான ஐஸ்வர்யா ராஜேஷ் தற்போது ஆக்சன் கிங் அர்ஜுனுடன் இணைந்து நடிக்கவுள்ளார்.

இவர் நடிப்பில் அண்மையில் திட்டம் 2, பூமிகா ஆகிய படங்கள் வெளியாகி பெரு வரவேற்றைப் பெற்றன.

இந்த நிலையில் அடுத்து ஆக்சன் கிங் அர்ஜுனுடன் இணைந்து நடிக்கவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் படத்தை தினேஷ் லட்சுமணன் இயக்கவுள்ளார். குழந்தைகளின் பின்னணியில் ஒரு பெண் கதாபாத்திரத்தை மையமாகக் கொண்ட க்ரைம் திரில்லர் கதைக்களத்தில் உருவாகும் இந்தப் படத்தில் விசாரணை அதிகாரியாக அர்ஜுன் நடிக்கவுள்ளார். மாறுபட்ட தனித்துவமாகவும் வித்தியாசமாகவும் இந்தப்படம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## twitter

**கோழியின் கிறுக்கல்!!**

மனைவியிடம் பொய் சொல்லும் பொழுது, 'மண்டை மேல இருக்கிற கொண்டையை' மறந்த கதை தான் ஆண்களின் நிலை!!

**சப்பாணி@**

பிடிபட்ட மீனின்
கண்களில் நிரம்பி வழிகிறது
மரண பயத்தைவிடவும் அதிகமாய்
சிறு புழுவுக்காகச் சென்று
ஏமாந்த அவமானம்

**செங்காந்தள்@**

மாற்றுத் திறனாளிகள் என்பதை விட "மாற்றும் திறனாளிகள் என்று அழைப்பதே சரியாக இருக்கும்...!!!

**mohanram.ko**

சாப்பிடுவதற்கு முன் உணவை காக்காவுக்கு வைக்கிற மாதிரி, வாட்ஸ் அப் ஸ்டேட்டஸ்ல வைக்கிறாங்க...



# இன்றைய நாள்

**மேடம்:** அக்கம்பக்கத்தினருடன் இருந்த சுச்சல் குழப்பங்கள் நீங்கும். பலகாலம் அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். கருத்து வேறுபாட்டால் யாரையும் பகைத்துக் கொள்ளவேண்டாம்.

**இடபம்:** பணி நெருக்கடிகள் குறைந்து நிம்மதி வரும். பணியாளர்கள் கூடுதல் வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். நன்மைகள் முயற்சியின்றி தாமதமாகவே கிடைக்கும்.

**மிதுனம்:** யாரை நம்புவது என்கிற குழப்பத்திற்கு ஆளாகித் தெளிவீர்கள். திருவாதிரை: விடாப்பிடியாக முயன்று சில வேலைகளை முடிப்பீர்கள். பக்தி சிந்தனை கூடுதலாகும்.

**கடகம்:** வழக்கத்தைவிட அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். குழப்பங்கள் அகலும். கூட்டு முயற்சி மகிழ்ச்சி தரும். அவசியம் ஏற்படுவதால் வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**சிம்மம்:** சிறிய பிரச்சினை ஒன்று உருவாகிப் பிறகு சரியாகும். தடைகளைத் தாண்டி முன்னேறி உற்சாகம் அடைவீர்கள். உங்களுடைய செயல் ஒன்றால் குடும்பங்கள் இணையும்.பாராட்டு கிடைக்கும்.

**கன்னி:** உங்கள் அஜாக்கிரதையால் விவாதம் வராமல் கவனம் தேவை. முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். எதிர்பார்த்த பணம் வரும். பொது வாழ்வில் ஈடுபாடு வரும்.

**துலாம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வீண் கசப்பு நீங்கும்.

**விருச்சிகம்:** விலை உயர்ந்த பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள். பங்குதாரர் பிரச்னை தீரும். உழைப்பால் உயர்வு காண்பீர்கள். மறுக்கப்பட்ட விஷயம் ஒன்று கிடைக்கும்.

**தனுசு:** முந்தைய பிரச்சினைகளுக்கு புதிய தீர்வு காண்பீர்கள். வாழ்வில் தொல்லை கொடுத்து வந்தவர்கள் விலகுவர். சொத்துக்கள் வாங்குவதில் மிகுந்த கவனம் தேவை.

**மகரம்:** சவால் நிறைந்த பணி ஒன்றை நிறைவேற்றி வெல்வீர்கள். உடன் பிறந்தவர்கள் பகை நீங்கப்பெற்றுப் பாசமழை பொழிவார்கள்.

**கும்பம்:** நேற்றைய வருத்தங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். வீண் வம்புக்குப் போக வேண்டாம். உங்களின் திறமை கூடும். சோம்பலை அனுமதிக்காதீர்கள்.

**மீனம்:** அனுபவமிக்க நபர்களின் ஆலோசனையால் முன்னேறுவீர்கள். தைரியம் கூடும். தனிப்பட்ட வாழ்வில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

# தவறுகள் திருத்தப்படுபவை...




இந்த உலகில் யாரும் நூறு சதவீதம் எந்தத் தவறும் செய்யாத தரமானவர் கிடையாது.

இந்த உலகைச் சுற்றி வந்தாலும்கூட அப்படிப்பட்ட ஒருவரை கண்டுபிடிக்க இயலாது. ஏனெனில், தவறு செய்யாத மனிதன் இந்த உலகத்தில் யாருமே இல்லை. மனிதர்கள் என்றால் நிச்சயம் தவறு நடக்கும். அது காலத்தின் கட்டாயமாகக் கூட இருக்கலாம். அல்லது அறியாமையினால் ஏற்படும் தவறுகளாகக்கூட இருக்கலாம்.

ஒருவர் செய்யும் தவறானது அவர் அதை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் நிச்சயம் சரியான பாதையில் நடத்திச் செல்லும் என்பது முற்றிலும் உண்மையான விடயமே. ஏனெனில், அவர் செய்த தவறு அவருக்கு நிச்சயம் நல்லதொரு பாடத்தைக் கற்றுத் தந்திருக்கும். அந்தப் பாடமானது அவரை இன்னொரு தரம் அத்தவறை செய்யவிடாமல் தடுக்கும். அறியாமல் செய்த தவறை, அதன் தன்மையை அறிந்த பிறகு, அதை மீண்டும் செய்ய அது கற்றுத் தந்த அனுபவம் விடாது. தவறுகள் செய்து அதிலிருந்து கிடைத்த கசப்பான அனுபவங்கள்தான் நல்ல விடயங்களைத் தேடிச் செல்வதற்கான உந்துதலாக அமைகிறது. ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தவறிழைத்துவிட்டால், அதை எண்ணிக் கலங்காமல், அதைத் திருத்திக்கொண்டு அடுத்த கட்டத்துக்குச் செல்ல முயற்சிக்கவேண்டும்.












'மௌனம்' ஆண்களுக்காகவே எழுதப்பட்ட அகராதி...

ஆண்களின் கோபம்
நெடுநாள்களுக்கு எல்லாம்
நீடிப்பதில்லை
[illegible] ஆண்கள்
பற்கள் தெரிய சிரிப்பதில்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமைக்குட்பட்ட நாடுகளுக்கு மிச்சம் மீதியான தடுப்பூசிகளே

### உலக சுகாதார மையத்தின் தலைவர் ஆதங்கம்

**லண்டன், செப். 10**

**கொரோனாத் தடுப்பூசி விநியோகத்தில் ஏழை நாடுகள் வளர்ந்த நாடுகளிடம் அபிரிமிதமாக இருக்கும் மிச்சங்களைக் கொண்டு தங்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையில் சில வளர்ந்த நாடுகளும் மருந்து நிறுவனங்களும் செயற்படுகின்றன. இது ஏற்புடையது அல்ல என்று உலக சுகாதார அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.**




உலக சுகாதார மையத்தின் இயக்குநர் டெட்ரோஸ் அதோனம் ஜெனீவாவில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் தெரிவிக்கையில்,

சில தினங்களுக்கு முன்னர் மருந்து நிறுவனங்கள் தடுப்பூசிகளின் இருப்பு பூஸ்டர் டோஸை எதிர்கொள்ளவே போதுமானதாக இருக்கிறது என்று கூறின. அந்த மருந்து நிறுவனங்களின் அலட்சியம் என்னைக் கோபப்படுத்தியுள்ளது. கொரோனாத் தடுப்பூசி விநியோகத்தில் ஏழை நாடுகள் வளர்ந்த நாடுகளிடம் அபரிமிதமாக இருக்கும் மிச்சங்களைக் கொண்டு தங்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையில் சில வளர்ந்த நாடுகளும் மருந்து நிறுவனங்களும் செயற்படுகின்றன. இது ஏற்புடையது அல்ல. அப்படிப் பட்டவர்களின் நடத்தையைப் பொறுத்துக் கொண்டு அமைதி காக்க மாட்டேன்.

ஏழை, வளரும் நாடுகளின் சுகாதாரப் பணியாளர்களும், மூத்த குடிமக்களும் மற்ற நாட்டவரைப் போலவே தடுப்பூசியை சமவாய்ப்புடன் பெறத் தகுதியானவர்களே. ஏற்கனவே நான் கடந்த மாதம் வளர்ந்த நாடுகள் பூஸ்டர் தடுப்பூசியை வழங்குவதை சற்றே நிறுத்தி வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தேன். தற்போது மீண்டும் அதையே வலியுறுத்துகிறேன். இந்த ஆண்டு இறுதி வரையிலாவது வளர்ந்த நாடுகள் மூன்றாம் டோஸ் தடுப்பூசியை நிறுத்தி வைக்கலாம். இதன்மூலம், உலகளவில் அனைத்து நாடுகளுமே குறைந்தபட்சம் தங்கள் மக்களில் 40 வீதமானவர்களுக்கு தடுப்பூசி செலுத்த முடியும்- என்றார். (ம)



## தலிபான்கள் – சீனா கருத்து மோதல்!

### அமெரிக்கா சந்தேகம்

வொஷிங்டன், செப். 10

தலிபான்களுக்கும் சீனாவுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த இரு தரப்புக்கும் இடையே பிரச்சினைகள் உள்ளன என்று அமெரிக்க அதிபர் பைடன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தலிபான்களுக்கும் சீனாவுக்கும் இடையில் தீர்க்கப் பட முடியாத சில பிரச்சினைகள் உள்ளன. அவற்றைச் சரிசெய்ய தலிபான் பெரிய விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய வேண்டிவரும். அது அவ்வளவு இலகுவானதல்ல. ஆனால், பாகிஸ்தானுடன் தலிபான் இணைந்து செயற்பட அதிக வாய்ப்புள்ளது - என்றார்.

சீன வெளிவிவகார அமைச்சர் தலிபான்களுக்கு விடுத்த செய்தியில், தலிபான்கள் மிதமான போக்கையே உள்நாட்டிலும் வெளியுறவிலும் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்துகிறோம்.

ஆப்கான் மண்ணிலிருந்து அனைத்துத் தீவிரவாத அமைப்புகளையும் வேரறுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளமையானது பைடன் சொல்வதைப் போல இரு தரப்புக்கும் இடையே மனக்கசப்புக்கள் உள்ளன என்பதை மெய்ப்பிக்கும் வகையில்தான் அமைந்துள்ளன என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர். . (ம)



## ஆயுதங்களால் ஆட்சியை தீர்மானிக்க அனுமதியில்லை

### கினிய இராணுவத்துக்கு ஐ.நா. சபை கண்டனம்

வொஷிங்டன், செப். 10

கினியாவில் ஜனநாயக அரசு கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கினிய இராணுவத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவித்துள்ளது. 'ஆயுதங்களால் அரசைத் தீர்மானிக்க ஒருபோதும் அனுமதிக்க முடியாது' என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் குத்தேரஸ் தெரிவித்தார். கினியாவில் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அதிபர் அல்பா காண்டே வெற்றிபெற்றார். அதன் பின்னர் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் வெற்றிபெற்ற அவர் கடந்த 11 ஆண்டுகளாக அதிபராகத் தொடர்ந்தார். கடந்த 6 மாதங்களில் அதிபர் ஆல்பாவின் ஆட்சிக்கு எதிராகக் கடுமையான விமர்சனம் முன்வைக்கப்பட்டது. இந்தப் பின்னணியிலேயே அங்கு இராணுவ ஆட்சி அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆப்கான் உள்விவகாரங்களில் சீனா ஒருபோதும் தலையிடாது

### *சீன வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு*



காபூல், செப். 10

ஆப்கானிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையிடாது. ஆனால், பயங்கரவாதத்தின் சொர்க்கபுரியாக ஆப்கானிஸ்தான் மாறுவதை தலிபான்கள் அனுமதிக்கக்கூடாது என்று சீன வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் மூன்று வாரகால குழப்பம் முடிவுக்கு வந்துள்ளது. புதிய இடைக்கால அரசை அமைத்ததோடு தலிபான்கள் நாட்டை ஓர் ஒழுங்கு முறைக்குள் கொண்டுவர வேண்டும். ஆப்கான் உள்நாட்டு விவகாரங்களில் நாங்கள் தலையிடமாட்டோம்.

ஆனால், தலிபான்கள் மிதமான போக்கையே உள்நாட்டிலும் வெளியுறவிலும் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்துகிறோம். ஆப்கான் மண்ணிலிருந்து அனைத்துத் தீவிரவாத அமைப்புகளையும் வேரறுக்க வேண்டும். அப்போதுதான் பிற நாட்டுடனான உறவைப் பேண முடியும். குறிப்பாக அண்டை நாட்டுடன் நல்லுறவு ஏற்படும் - என்றார். (ம)

## ஜஸ்ரினுக்கு எதிர்ப்பலை தேர்தலில் பின்னடைவா?



ஒட்டாவா, செப். 10

கனேடியப் பிரதமர் ஜஸ்ரினுக்கு எதிராகப் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. தேர்தலுக்கு இன்னும் வெறும் இரு வாரங்களே உள்ள நிலையில் இந்தப் பேரணிகள் ஜஸ்ரினுக்கான பின்னடைவா என்ற கேள்வி எழும்பியுள்ளது.

தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்பு ஜஸ்ரினுக்கு அதிகமாகவே இருந்தது. ஆனால், அவர் அண்மையில் கட்டாயத் தடுப்பூசித் திட்டத்தைக் கொண்டுவந்தார். இதனாலேயே அவருக்கு எதிராகப் பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றுவருகின்றன.

கனடாவில் பெருமளவான மக்கள் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ள போதிலும் கட்டாயத் தடுப்பூசித்திட்டத்துக்கு அவர்கள் எதிர்ப்பையே வெளிப்படுத்துகின்றனர். (ம)

## தன்னைத்தானே திருமணம் செய்த பிரேசில் மொடல்



பிரேசிலியா, செப். 10

பிரேசிலியன் மொடலான கிரிஸ் கேலரா தன்னைத்தானே திருமணம் செய்துள்ளார். இதுகுறித்து ஊடகங்கள், '33 வயதான பிரேசிலின் மொடலான கிரிஸ் கேலரா தனது கடந்த காலங்களில் ஏற்பட்ட உறவு முறிவுகளால் விரக்தி அடைந்து இனி தனியாக வாழலாம் என்ற தீர்மானித்து இந்த முடிவை எடுத்திருக்கிறார். கிறிஸ் கேலராவின் திருமணம் பிரேசிலின் பிரபல கத்தோலிக்க தேவாலயத்தில் நடைபெற்றது. திருமண நிகழ்வில் கிறிஸ் கேலராவின் நண்பர்கள், உறவினர்கள் கலந்து கொண்டனர்' என்று செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைஸர் தடுப்பூசிகளை மாணவருக்கு ஏற்றுக!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து



**கொழும்பு, செப். 10**
**20-29 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு பைஸர் தடுப்பூசி செலுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இந்த வயதெல்லைக்கு உட்பட்டவர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியை வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக செய்தித் தொடர்பாளர் மருத்துவர் சமந்த ஆனந்த, கையிருப்பில் உள்ள பைஸர் தடுப்பூசிகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சிடம் வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் போன்ற நிறுவனங்கள் 12 -18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசி பொருத்தமானது என்று பரிந்துரைத்துள்ளன. சிறுவர்கள் கொவிட்19 தொற்றால் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றமையால் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்த பரிந்துரைக்கிறது. ஒக்டோபரில் நான்கு மில்லியன் பைஸர் தடுப்பூசிகள் நாட்டை வந்தடையவுள்ளன- என்றார். (எ-இ)



# தருமபுரம் சந்தை பூட்டு வியாபாரிகள் கவலை

கிளிநொச்சி, செப். 10
தற்போதைய முடக்க காலத்திலும், கிராமங்கள் தோறும் சிறிய சந்தைகள் திறக்கப்பட்டு, வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும் தருமபுரம் சந்தையைத் திறப்பதற்கு அனுமதிமறுக்கப்பட்டுள்ளது. இதனால் வியாபாரிகள் நாளாந்த வருமானத்தை இழந்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட தருமபுரம் சந்தை முற்றாக மூடப்பட்டுள்ள நிலையில், 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ள புதுக்குடியிருப்புப் பிரதேச சபைக்குட்பட்ட விசுவமடு சந்தையில் வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தருமபுரம் சந்தை மூடப்பட்டுள்ளதால், நாளாந்தம் மரக்கறி, மீன் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தருமபுரம் சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4,113)

# வயோதிபப் பெண் தவறான முடிவு

யாழ்ப்பாணம், செப். 10
மனநலம் பாதிக்கப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துள்ளார்.
இந்த சம்பவம் தனங்களப்பு சந்திக்கு அருகாமையில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.
தனங்களப்பு புங்கடி வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த 60 வயதுடைய பெண்ணே உயிரிழந்தார்.
அவரது சடலம் பி.சி.ஆர். மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (4,159)

# கள்ளன் - பொலிஸ் விளையாட்டில் அரசு

## எதிர்க்கட்சி சாடல்



கொழும்பு, செப். 10
கள்ளன் பொலிஸ் விளையாட்டில் ராஜபக்ச அரசு ஈடுபட்டுள்ளது. இந்த விளையாட்டில் கள்ளனும், பொலிஸும் நண்பர்கள் கூட்டம். பொலிஸார் கள்ளர்களைக் கைது செய்கின்றனர். ஆனால் தண்டனை தருகிறார்களா? இல்லை. இதுதான் இவர்களின் விளையாட்டு இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துசாரா இந்துனில் தெரிவிக்கையில்,

வியாபார நண்பர்களுக்கு சீனிக்கான இறக்குமதி வரியைக் குறைத்து, தேவையான சீனியை இறக்குமதி செய்து விட்டு, தற்போது அதிக விலைக்கு சீனியை விற்பனை செய்வதற்கான சந்தையையும் அரசு திறந்து விட்டுள்ளது. இங்கு ஏமாற்றப்படுவது மக்கள் தான். தற்போது சீனியை விற்று இலாபத்தைத் தமது வியாபாரிகளுடன் பங்கிட்டுக் கொள்கின்றது. இந்தக் கள்ளன் பொலிஸ் விளையாட்டுக்கு அவசர காலச் சட்டம் அவசியமில்லை. தனக்குத் தேவையான விடயங்களைச் செய்து முடிப்பதற்காக அவசரம் அவசரமாக அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்து அரசு நிறைவேற்றியுள்ளது.

இன்று நாட்டில் ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் மருத்துவர்கள் கைது செய்யப்படுகின்றனர். இத்தகைய [illegible] எதிர்க்கட்சி[illegible] எதிர்க்கின்றோம்- என்றார். (ம-4)



# சில மாதங்களில் மூன்றாவது டோஸ்

கொழும்பு, செப். 10
இன்னும் சில மாதங்களுக்குள் கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் மக்களுக்குச் செலுத்தப்படும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்போது 20 தொடக்கம் 29 வயதுக்கிடைப்பட்டவர்களுக்குத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம4)

சேவைநலன் பாராட்டு
திருமதி லோகநாயகி கங்காதரன்
பயிற்றப்பட்ட விவசாயம் - SLTS I



Best Wishes
Best Wishes

இன்று 31 வருட ஆசிரிய சேவையை நிறைவு செய்து ஓய்வுபெறும் எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி லோகநாயகி கங்காதரன் அவர்களை இறைவனின் ஆசியுடன் நீண்ட ஆயுளோடும் ஆரோக்கியத்தோடும் வாழ வாழ்த்துவதோடு சேவைநலன் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சேவை விபரம்:
யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் : 22.03.1990-30.01.2015
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை : 31.01.2015 - 10.09.2021

இவ்விரு பாடசாலைகளில் இதய சுத்தியுடன்
அயராத சேவை தன்னில் சிறாரை
ஆதரவாய் அரவணைத்து
அன்பும் பண்பும் அறிவும் பெருகிட
ஆசிரியத்துவத்தை ஒளிரச் செய்த
ஆசிரிய அன்னையே
உடலும் உள்ளமும் நலன்பெற்று
நல்வாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை



ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடிகள் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்று அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்தார்.

அப்போது சற்று பெரிய மனிதர் போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டு "ஏன் சோகமாக இருக்கிறீர்கள்" என்று கேட்டார். அதற்கு இவர் "எனது தொழில் நஷ்டம் அடைந்து விட்டேன். மிகவும் மனம் உடைந்து போய்விட்டது" என்றார்.

"எவ்வளவு ரூபாய் நஷ்டம்?" என்றால் அவர்.

"50 கோடி ரூபாய்" என்றார் இவர்.

"அப்படியா, நான் யார் தெரியுமா?" என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரை சொன்னார்.

அசந்து போனார் இவர்...

"சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா?" என்று கேட்டார் அவர்.

உடனே முகமலர்ச்சியுடன் இவர் "ஆமாம் எல்லாம் சரியாகி விடும்" என்றார்.

பின் அந்த செல்வேந்தர் ஒரு செக் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி "இந்தா இதில் 500 கோடிக்கு செக். நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்தப் பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்" என்று சொல்லிவிட்டு செக்கை இவர் கைகளில் திணித்துவிட்டு சென்றார் அவர்.

பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்துக்குச் சென்றார். தன் அறைக்குள் சென்று அந்தச் செக்கை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாரை அழைத்து அனைத்து ஊழியர்களை நிர்வாகக் கூட்டத்துக்கு அழைத்துவர ஏற்பாடு செய்யச் சொன்னார். ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார். "நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது, ஆனால் அந்த பணத்தை தொடமாட்டேன். இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது? எதனால் ஏதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதைக் களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன. தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு களையப்பட்டன. மிக சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். மிகச் சரியாக ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன. மிகச் சரியாக 550 கோடி ரூபா லாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம். அடுத்த நாள் விடிய காலை அந்த செல்வந்தர் கொடுத்த 500 கோடிக்கான செக்கை எடுத்துக் கொண்டு அந்த பூங்காவுக்கு விரைந்தார். சென்ற வருடம் அமர்ந்த அதே பெஞ்சில் அமர்ந்தார். காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வேந்தரும் அவருக்கு அருகில் அவரைக் கைகளால் பிடித்துக் கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது. சில விநாடிகள் கழித்துப் பார்த்தால் அந்தப் பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வந்தரைக் காணவில்லை.

இவர் சென்று அந்தப் பெண்மணியிடம் "எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர்?" என்றார்

அதற்கு அந்தப் பெண்மணி பதற்றத்துடன் "உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்துவிட்டாரா?" என்றார்

இவர் "இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள்?" என்றார்.

அந்தப் பெண்மணி "இல்லை அய்யா அவர் ஒரு பைத்தியம் அதாவது மன நிலை சரி இல்லாதவர், செக்கு தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கைக் கிழித்து கையெழுத்திட்டு கொடுத்து விடுவார்" என்றார். ஒரு நிமிடம் அந்த நிறுவனத் தலைவருக்கு பேசமுடியவில்லை. அப்போ நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். அதுவே நம்மைக் காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்தார். நம்மால் எதையும் செய்ய முடியும் என்று முதலில் நாம் நம்பவேண்டும். அப்போதுதான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும்

# திருக்குறள்

அறத்தான் வருவதே இன்பம் மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

**பொருள் :** அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை: புகழும் இல்லாதவை.






Peacock
மயில்



Parrot
கிளி



Crow
காகம்



Hen
கோழி



Eagle
கழுகு



Love birds
அன்றில் பறவை

# வெள்ளை மாளிகை



அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த கட்டடக்கலை வல்லுநரான ஜேம்ஸ் ஹோபன் என்பவர் வெள்ளை மாளிகையை வடிவமைத்துள்ளார்.

கறுப்பின அமெரிக்கர்களை வைத்து வெள்ளை மாளிகையை கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகையைக் கட்ட ஜார்ஜ் வாஷிங்டன் காரணமாக இருந்தாலும், அவருக்கு அடுத்து பதவிக்கு வந்த ஜான் ஆடம்ஸ்தான் இம்மாளிகையில் வசித்த முதல் அமெரிக்க அதிபர் ஆவார். வில்லியம் ஹென்ரி ஹாரிசன், சசாரி டெய்லர் ஆகிய அமெரிக்க அதிபர்கள் வெள்ளை மாளிகையில் வைத்து உயிரிழந்துள்ளனர்.

1933ஆம் ஆண்டில், பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் அமெரிக்கா வின் அதிபராக இருந்த காலகட்டத்தில் வெள்ளை மாளிகையில் நீச்சல் குளம் கட்டப்பட்டது.

வெள்ளை மாளிகையில் தங்கும் அதிபர்களுக்கு மாதந்தோறும் உணவு, சலவை உள்ளிட்டவற்றுக்காகச் செலவு செய்யப்படும் தொகை அவர்களின் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

55 ஆயிரம் சதுரடி பரப்பளவு கொண்ட வெள்ளை மாளிகைக் கட்டடத்தைப் பராமரிக்க ஆண்டொன்றுக்கு 1.6 மில்லியன் டொலர்கள் செலவழிக்கப்படுகிறது.

வெள்ளை மாளிகையில் மொத்தம் 132 அறைகளும், 135 கழிப்பறைகளும் உள்ளன.

டென்னிஸ் கோர்ட், தோட்டம், நீச்சல் குளம், தியேட்டர், கூடைப்பந்து மைதானம், பில்லியர்ட்ஸ் அறை உள்ளிட்ட வசதிகளும் வெள்ளை மாளிகையில் உள்ளன.



# பொறுமை

சீனர் மூங்கிலைப் பயிரிட்டு தண்ணீர் ஊற்றுவார்கள். பருவங்கள் போகும் ஆனால் செடி வளரவே வளராது. ஒரு இன்ச் அளவு கூட வளராமல் அடம்பிடித்து அப்படியே இருக்கும். முழுசாய் நான்கு வருடங்கள் செடி அப்படியே இருக்கும். செடிக்குத் தண்ணீர் ஊற்றுபவர் பொறுமையுடன் அதைப் பராமரிக்க வேண்டும்.

நான்கு ஆண்டுகளாய் அவருக்கு சிலாகிக்கவோ, மகிழ்ச்சி கொண்டாடவோ எதுவுமே இருப்பதில்லை. ஆனால் அதற்கு அடுத்த பருவத்தில் எல்லோரும் வியக்கும் வண்ணம் அந்த மூங்கில் வளரத் துவங்கும். அதுவும் எப்படி ? சட சடவெனும் அசுர வளர்ச்சி. ஒரே ஆண்டில் அது எட்டிப் பிடிக்கும் உயரம் எவ்வளவு தெரியுமா ? 80 அடிகள். நான்கு ஆண்டு காலமாக அமைதியாக இருந்த செடி, எப்படி ஐந்தாவது ஆண்டில் மட்டும் விஸ்வரூப வளர்ச்சியை எட்டுகிறது ?

ஆராய்ந்து பார்த்தால் ஆச்சரியம் தரும் ஒரு ரகசியம் இதில் இருப்பதைப் புரிந்து கொள்ளலாம். இயற்கையின் அற்புதம் என்றோ, கடவுள் படைப்பின் மகத்துவம் என்றோ நீங்கள் பெயரிட்டுக் கொள்ளுங்கள். முதல் நான்கு ஆண்டுகள் அந்த மூங்கில் வேர்களை பூமியில் நன்றாக இறக்கி மிகச் சிறந்த பிடிமானத்தை உருவாக்கிக் கொள்கிறது. ஐந்தாவது ஆண்டில் நான் எண்பது அடி உயரமாக வளரப் போகிறேன், என்னைத் தாங்கிப் பிடிக்கும் வல்லமை என் வேர்களுக்குத் தேவை என அது முழு மூச்சாய்த் தன்னைத் தயாரிக்கும்.

அதனால் தான் ஐந்தாவது ஆண்டில் அசுர வளர்ச்சி அடையும் போது அது தடுமாறுவதும் இல்லை, தடம் புரள்வதும் இல்லை!

பொறுமை உயரமான வெற்றிகளை உருவாக்குகிறது. அவசரப் பட்டு முளைத்து, சடசடவென வீழ்ந்து விடாமல், எமது அடித்தளத்தை வலுவாக்கிக் கொள்ள பொறுமை நம்மைத் தூண்டுகிறது.

# வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எரிவாயு...

வைத்துள்ளதாக அறிய முடிகின்றது.
கடந்த மாதம் 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 363 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மீண்டும் 12.5 கிலோ கிராம் எடைகொண்ட சிலிண்டரின் விலையை 291 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என்று லாப்ஸ் நிறுவனம் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இந்த கோரிக்கைக்கு அரசு அனுமதியளித்தால் லாப்ஸ் சிலிண்டரின் புதிய விலையாக 2 ஆயிரத்து 147 ரூபா காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ.இ)

### கொரோனாத்...

உறுதிப்படுத்திக்கொள்வதற்கு பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளுக்கு மேலதிகமாக மற்றுமொரு பரிசோதனை உபகரணமொன்று பேராதனை பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் அடங்கிய குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது. உபகரணத்தைத் தயாரித்த மூத்த விரிவுரையாளர் ருச்சிக பெர்னாந்து உள்ளிட்ட குழுவால் அவ்வுபகரணம் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
இந்தப் பரிசோதனை உபகரணத்தின் மூலம் மிகவும் விரைவாகவும் குறைந்த செலவிலும் கொரோனாத் தொற்றாளர்களை அடையாளங்கண்டு கொள்ளமுடியும். ஆயிரத்து 500 ரூபா செலவில் கொவிட் 19 தொற்று ஏற்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பரிசோதனையை மேற்கொள்ளமுடியும் என்று அதனைத் தயாரித்த மூத்த விரிவுரையாளர் ருச்சிக பெர்னாந்து தெரிவித்துள்ளார். (ஒ.இ)

### கடித...

பாணத்திலுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில், கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இணைந்து காலை 10 மணிக்கு பத்திரிகையாளர் சந்திப்பை நடத்துகின்றனர்.
அதேநேரம் கிளிநொச்சியிலுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தவுள்ளார். (ஒ.5)

### கடன்...

எது. பாதிக்கப்பட்ட கடனாளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சலுகைக் கால எல்லை கடந்த மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. இந்த நிலையில் அதனை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நீடிப்பதை பரிசீலனையில் கொள்ளுமாறு, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும் மத்திய வங்கி கோரியுள்ளது.
இந்த சலுகைகள், பாதிக்கப்பட்ட கடனாளிகளுக்கு 2022ஆம் ஆண்டு ஜனவரி முதல் தொடர்ந்து தங்கள் நிலுவைச் தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஒரு வாய்ப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (ஒ.இ)

### பானைகளை...

ரது குடும்ப உறுப்பினர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.
வைத்தியர் எலியந்த வைட் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு வருகிறது.
இலங்கையில் கொரோனாத் தொற்று பரவலடைய ஆரம்பித்த சமயத்தில், கொரோனாவை கட்டுப்படுத்த குண்டலினி சக்தி தன்னிடம் இருந்தது என்று அவர் கூறினார். மந்திரித்த பானைகளை ஆறுகளில் போட்ட சம்பவத்தின் பின்னணியிலும் அவரேயிருந்தார். கொரோனாவைக் கட்டுப்படுத்தும் மந்திரித்த சக்தி அடங்கிய பானையென அவர் ஆற்றில் பானையை வீசியதை தொடர்ந்து, அமைச்சர்கள் பவித்ரா வன்னியாராச்சி, உதயகம்மன்பில, பிரசன்ன ரணதுங்க ஆகியோரும் ஆறுகளில் பானைகளைப் போட்டனர்.
வைத்தியர் எலியந்த வைட் எந்தவொரு தடுப்பூசியையும் இதுவரை பெற்றிருக்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ.இ)


## திருத்தம்

யாழ்ப்பாணம் மாநகரசபை, யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேற்றளத்தின் நிலப்பகுதிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்காக 09.09.2021ம் திகதி பிரசுரிக்கப்பட்ட விலை மனுக்கோரல் விளம்பரத்தின் 04ம் பந்தியில் **விண்ணப்பங்கள் வழங்கப்படும் காலப்பகுதி 2021.09.10ம் திகதி தொடக்கம் 2021.09.30ம் திகதி வரை என மாற்றம் செய்து வாசிக்கவும்.**

2021.09.10

தலைவர்,
பெறுகைக்குழு,
யாழ்ப்பாணம் மாநகரசபை.



## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 18 . 03 . 1965



மறைவு 04 . 09 . 2021

**சோமதேவக்குருக்கள் - ஜெயந்தி**

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பிரதம குரு காலஞ்சென்ற சாம்ப சதாசிவக்குருக்களின் அன்பு மருமகள் திருமதி சோமதேவக்குருக்கள் ஜெயந்தி அவர்கள் இறைபதம் சேர்ந்த செய்தி அறிந்து எம்மனம் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
முழக்கப்பிட்டி நாச்சிமார் கோயில்
நீர்வேலி.



## மரண அறிவித்தல்

மலர்வு 12 . 05 . 1945



உதிர்வு 09 . 09 . 2021

**செங்கேணி சுப்பிரமணியம் (சுப்பு)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செங்கேணி சுப்பிரமணியம் நேற்று (09.09.2021) வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற செங்கேணி வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், இராசரத்தினம் அழகம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கவிதா (ஆசிரியர், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), மதுரா (USA) ஆகியோரின் அன்பு தகப்பனாரும், அகிலன் (விநாயகர் மில்), பத்ம கிருபா (USA) அவர்களின் அன்பு மாமனாரும், ஹர்நிஷா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), திவநிஷா (யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), லித்திக்கேஷ் (USA), கௌஷிக் (USA) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
அகிலன் (மருமகன்) -0771392044

தகவல்:
குடும்பத்தினர்.


# சுகாதார விதிமுறையை மீறின் கைதுசெய்யப்படுவீர்கள்

## பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

கொழும்பு, செப். 10
சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ, பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவரும் பொதுமக்கள் தனியாள் இடைவெளியைப் பேணி, சுகாதாரப் பரிந்துரைகளுக்கு அமையச் செயற்பட வேண்டும். தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வரும் சிலர் தனியாள் இடைவெளியைக் கவனத்தில்கொள்ளாது நடந்துகொள்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது.
தனியாள் இடைவெளி மற்றும் முறையான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாத மக்களுக்கிடையே கொரோனாத் தொற்று நோய் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.
எனவே, சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் கைதுசெய்யப்படுவார்கள். அத்துடன் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். (து-22)

# கொரோனாத் தொற்றால் வவுனியாவில் 6 பேர் சாவு

வவுனியா, செப். 10
கொரோனாத் தொற்றால் வவுனியாவில் 6 பேர் நேற்று உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
திடீர் சுகவீனம் காரணமாக இருவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் மருத்துவமனையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தநிலையில், சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தனர். இதேவேளை சுகவீனம் காரணமாக வீடுகளில் நேற்று 4 பேர் உயிரிழந்தனர்.
அவர்களின் உடல்கள் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (து-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45வது நாள் நினைவஞ்சலி

தோற்றம்
23 . 06 . 1946



மறைவு
28 . 07 . 2021

## அமரர் தம்பிப்பிள்ளை சர்வானந்தம்

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து தனது உடன் பிறந்த சகோதரிகளது நல்வாழ்வுக்கு வழிவகுத்து சகோதரியின் பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பி அவர்கள் தத்தமது குடும்ப வாழ்க்கையை நிலைநிறுத்திக்கொள்ள வழிகாட்டி, கடைசிவரை தான் குடும்ப வாழ்க்கையில் இணைந்து கொள்ளாமல் எமது நல்வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்துக்கொண்ட எமது அன்புத் தெய்வம் அமரர் தம்பிப்பிள்ளை சர்வானந்தம் கடந்த 28.07.2021 இல் இவ்வுலக வாழ்வை நீத்து இறையடி எய்தினார்.

அவர்களது மறைவின் 45ம் நாளான இன்று 10.09.2021 (வெள்ளிக்கிழமை) அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிராத்திப்போம். தற்போதைய சூழ்நிலை காரணமாக உற்றார், உறவினர்களுடன் இணைந்து பிராத்திக்க முடியாத நிலையில் உள்ளோம்.

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற அருளுமாறு இறைவன் பாதம் தொழுது நிற்கின்றோம்.

**சகோதரி:**
**திருமதி சந்திராதேவி-சோதிலிங்கம்**
**மருமக்கள்: ஜெயந்தன் - (சுவிஸ்)**
**அகிலன் (ஜேர்மனி)**
**தீபா (கனடா)**

கற்பகவிநாயகர் வீதி, உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
076 575 5539

# மரண அறிவித்தல்

பிறப்பு
24 . 12 . 1954



இறப்பு
08 . 09 . 2021

## திருமதி வினிபிரட் விமலேந்திரநாதன் பாலராணி

இடைக்குறிச்சி வரணியைப் பிறப்பிடமாகவும் இல.20, 1/4 இனிசியம் வீதி, தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வினிபிரட் விமலேந்திரநாதன் பாலராணி அவர்கள் கடந்த (08.09.2021) புதன்கிழமை அதிகாலை 12.10 க்கு கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்கள்ர்ன வேலுப்பிள்ளை பூமணி தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான டானியல்-ஜேம்ஸ் பொன்னுத்துரை மேரி அன்னரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வினிபிரட் விமலேந்திரநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், வில்லியம் ஜெயநேசன் (ஆசிரியர், கொழும்பு புனித மரியாள் தமிழ் மகாவித்தியாலயம் - கொழும்பு-04), டானியல் ஜெயசீலன் (லண்டன்), வின்சன் ஜெயக்குமார் (கனடா), ஸ்ரீபன் ஜெயராஜ் (Accountant-B.B.K), ஜெசி ஜெயபாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பபிந்தினி, பானுமதி (லண்டன்), ரூபினி (கனடா), டிலானி, றிக்கேஸ் (ஆசிரியர், கொழும்பு புனித பரி.தோமையார் கல்லூரி கல்கிசை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பரஞ்சோதி, பாலகௌரி, வரதலக்ஷ்மி, அமரர் பாலசோதி, சிவயோகம் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், அமரர் ஜோர்ஜ் பாலேந்திரா, அமரர் இந்திராணி, வணபிதா நவேந்திரா அனுகூலன், ஜஜேந்திரலலிதா, இந்திரவதனா ஆகியோரின் மைத்துனியும், பெவன், பெவினி, பெனாஜா, ஜெரிஜா, ரியானா, ரஷான், டிவ்யா, நிவ்யா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், ஜெய்டன், ஜெய்ட்றா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15.09.2021 மு.ப. 11.00 மணிக்கு கோம்பயன் மயானத்தில் கொரோனா விதிகளுக்கு அமைவாக குடும்ப அங்கத்தவர்கள் ஐவருடன் தகனம் செய்யப்படும். பின்னர் அஸ்தி இறுதி ஆராதனையுடன் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வி.வி. ஜெயநேசன் (மகன்)** 077 939 6648
**வி.ஸ். ஜெயராஜ் (மகன்)** 077 027 9673
**ஜெசி ராஜேந்திரா (மகள்)** 077 712 6263
**வி.வின்சன் ஜெயகுமார் (மகன்)** +17788986390
**வி.டானியல் ஜெயசீலன் (மகன்)** 00447888888596

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 06 . 1949



மறைவு
09 . 09 . 2021

## திரு. சுப்பிரமணியம் திருநாவுக்கரசு

வேலணை கிழக்கை பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்த விநாயகர் வீதி, 1ம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவில் நாவலர் வீதியில் வசித்த சுப்பிரமணியம் திருநாவுக்கரசு அவர்கள் 09.09.2021 அன்று வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், கனகரட்ணம் இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், மற்றும் மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், கஸ்தூரி, அஜந்தன் (பிரான்ஸ்), அனுசன் (மலேசியா) மயூரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீபன், கோகிலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யனோஷா, வினோஜ் ஆகியோரின் அன்புப் பேரனும், சிவயோகம், மங்கையற்கரசி, காலஞ்சென்ற தேவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் கணேசலிங்கம், சிவநாதன் (லண்டன்), மனோகரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (லண்டன்), மஞ்சுளா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் நாவலர் ஒழுங்கையில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாவலர் வீதி, உப்புமடம்,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**
**077 808 4940**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

மண்ணில்
19 . 02 . 1971



மனதில்
09 . 09 . 2021

## ஸ்ரீமதி ந.சிவனேஸ்வரிஅம்மா

காரைநகரை பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட கொக்குவில் பொற்பதிபிள்ளையார் கோவில் பிரதமகுருவினது துணைவியாருமான ஸ்ரீமதி ந.சிவனேஸ்வரிஅம்மா நித்திய சுமங்கலியானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஸ்ரீ சி. சிவசுப்ரமணியக் குருக்கள் ஜெயலக்ஷ்மி தம்பதிகளது மூத்த புதல்வியும், காலஞ்சென்ற (தாவடி) சிவஸ்ரீ சிவசாமிக் குருக்கள் கமலாம்பிகைஅம்மாவினது பேரபிள்ளையும், காலம்சென்ற (இணுவில்) சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் பட்டம்மாள் தம்பதிகளது தாய்வளி பேத்தியும், சி.வைத்தீஸ்வரனது தங்கையும், உ.ஜெகதீஸ்வரியது அக்காவும், ஸ்ரீமான் ஸ்ரீமதி ந.தியகராஜ குருக்கள் ரத்னேஸ்வரி தம்பதிகளது மருமகளும், சிவஸ்ரீ தி. நடராஜக்குருக்களது அன்பு மனவியும், பிரம்மஸ்ரீ தி. ஸ்ரீதரசர்மா ஆனந்தி தம்பதிகள் ஸ்ரீமதி தி.ஜெயலக்ஷ்மி அம்மா ஸ்ரீமதி தி. சுகிர்தாஅம்மா ஆகியோரது அண்ணியும், செல்வி அபிசாலினி, செல்வன் அபிசானந் ஆகியோரது மாமியும், செல்வி கிருஷ்ணானுஜ, செல்வன் ஜைமினிய சர்மாவினது மூத்த அத்தையும் ஆவார்.

தகனக்கிரிகைகள் 11.09.2021 அன்று யாழ்-கோம்பயமணல் மின் மயானத்தில் நடைபெறும்.

**தொடர்புகளுக்கு:**
நடராஜகுருக்கள் : 077 471 2555
சுழிபுரம் 021 225 0850
077 175 1456
ஜெகதீஸ்வரி உதயன்சர்மா(சுவிஸ்)
கொக்குவில் 0771889105
0041764837423
வைத்தீஸ்வரன்: 00610425666725
(சிட்னி)அவுஸ்ரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணுலகில் 10 . 04 . 1944



விண்ணுலகில் 09 . 09 . 2021

## அமரர் குணரெட்ணம் ஜஸ்வரி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், ஓட்டுமடம், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குணரெட்ணம் ஜஸ்வரி (09.09.2021) நேற்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாசியார்-பாக்கியம் தம்பதியரின் புதல்வியும், கந்தையா-மீனாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற குணரெட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், இராமச்சந்திரன், சிவசுப்பிரமணியம் காலஞ்சென்றவர்களான அருள்வேல், நவமணி, மற்றும் நாகேஸ்வரியின் சகோதரியும், ஜீவறூபி, சாந்தறூபி, பகீரதன், ஸ்ரீதரன், ஆனந்தறூபி, ஞானறூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சுதாகரன், மற்றும் சிவதாஸ், சிவசக்தி, சுரேகா, காலஞ்சென்ற தயானந்தன் மற்றும் தயாளன் ஆகியோரின் அன்புமாமியாரும், விஜயறூபி, கம்சத்வனி ஆகியோரின் பெரியதாயாரும், ஐஸ்வர்யா, சுரேஷ், சகீஷ், ஹர்சிகா, விதுரன், கதிர்சிகன், கரினிகா, அர்விந், அச்சுதா, ஆரணியா அவர்களின் பேர்த்தியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.09.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பிற்பகல் 2 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கேணியடி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## இராஜேந்திரம் புவனேஸ்வரி (பூபதி ரீச்சர்)

ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் புவனேஸ்வரி (பூபதி ரீச்சர்) அவர்கள் நேற்று (09.09.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் பொன்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற இராஜேந்திரம் (பிரதான கணக்காளர், கச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும், சசிகலா (கனடா), அமிர்தகலா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ் சென்ற தயாளன் மற்றும் ஜெயம் (கனடா), சுகந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாசன் (கனடா), அல்பிரட் (பீடாதிபதி, முகாமைத்துவ பீடம், பேராதனை பல்கலைக்கழகம்) கோணேஸ்வரி, அருள்மதி (கனடா), சிவலீலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சி (கனடா) அம்ருது (கொங்கொங்), திவ்வியன், சிந்துயா (கனடா), சுவேதா (கனடா), கவிதா (கனடா), கிருஸ்ணா (கனடா), பவினா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 02 . 1932



மறைவு 09 . 09 . 2021

## திருமதி தில்லைநாயகி தம்பித்துரை

வண்ணார்பண்ணை வடமேற்கு ஐயனார்கோவிலடி ஒடை ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாயகி தம்பித்துரை நேற்று (09.09.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிநடராஜா அன்ன லட்சுமி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்ற திரு. திருமதி சுப்ரமணியம் ஆதிலட்சுமியின் மருமகளும், காலஞ் சென்ற திரு. சுப்பிரமணியம் தம்பித்துரையின் அன்பு மனைவி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2021) வெள்ளிக் கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**அன்புச் சகோதரிகள்,**
**டாக்டர் திருமதி சரஸ்வதி தம்பிராஜா**
**செல்வி.சாந்தலட்சுமி தம்பிநடராஜா**
**077 8395 661**

# மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 09 . 1947



இறப்பு 08 . 09 . 2021

## செல்லக்கண்டு அன்னரத்தினம்

நொச்சியம்பதி வீதி, அராலி மேற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லக்கண்டு அன்னரத்தினம் அவர்கள் கடந்த (08.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லக்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், தங்கராஜா, நகுலேஸ்வரி, கனகாம்பிகை, சிவராணி, சிவலோகநாதன், கவிதா, சந்திரகுமார், சிறிவஜன் ஆகியோரின் பாசமிகு தாயும், தியாகராசா, சுபாஜினி, சுகனியா, கனகசபை, கிருபாகரன், கிருசா, செல்வலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.09.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துகட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்க்ள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நொச்சியம்பதி வீதி,**
**அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் கனகநாயகி பொன்னம்பலம்



உதயம் 18.07.1936

வீரபத்திரர் பாதத்தில் 22.08.2020

வையத்துள் மனம்போல வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்பத் தலைவியே
அன்பின் திருவுருவே!
எம்மை வையத்துள் விட்டு
வானுலகு சென்றனயோ
ஆண்டு ஒன்றானாலும்
ஆறுமோ எம்மனம் அவனியிலே

தங்கை கனகசோதி
(தங்கராணி)
மருமக்கள்.

## சுற்றிவளைப்பில் 7 பேர் கைது

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட போதைப் பொருள் சுற்றிவளைப்புகளில் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலெவத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 44 கிராம் 460 மில்லிகிராம் ஹெரோய்னுடன் வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேசன் புர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 7 கிராம் 170 மில்லிகிராம் ஹெரோய்னுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹெரோய்ன் விற்பனையில் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் 5 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பணத்தையும் இதன்போது குறித்த நபரிடமிருந்த பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர்கள் உட்பட 7 பேரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

(து-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அன்றாடப்....

இந்தப் பொருள்களின் இறக்குமதிக்காக வர்த்தகர்கள் முழுமையான தொகையைச் செலுத்தியே நாணயக் கடிதங்களை (லெட்டர் ஒப் கிரெடிட்) பெற்றுக் கொள்ள முடியும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளமையே இதற்குக் காரணமாகும்.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை நேற்று முன்தினம் இடம்பெற்ற அதன் கூட்டத்தில் உடனடியாகச் செயற்படும் வகையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியுடனான நாணயக் கடிதங்களின் (லெட்டர் ஒப் கிரெடிட்) ஏற்றுக்கொள்ளல் நியதிகளுக்கெதிரான ஆவணங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற அல்லது அவசரமற்ற பொருள்களின் இறக்குமதிக்கெதிராக 100 சதவீத காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டை விதிப்ப தற்குத் தீர்மானித்துள்ளது. காசு எல்லை வைப்புத் தேவைப்பாட்டை விதிப்ப தற்கான தீர்மானம், குறிப்பாக, ஊகவியாபாரத் தன்மையிலான மிதமிஞ்சிய இறக்குமதிகளை ஊக்கமிழக்கச்செய்வதன் வாயிலாக செலாவணி வீத உறுதிப்பாட்டையும் வெளிநாட்டு நாணயச் சந்தை திரவத்தன்மை யையும் பாதுகாப்பதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்குத் துணையளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள வர்த்தகர்கள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் பெறுமதி, காப்புறுதி, கப்பல் கட்டணம் என்பனவற்றை உள்ளடக்கிய பெறுமதியின் 25 சதவீதத்துக்கே நாணயக் கடிதங்களை வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். மத்திய வங்கி அறிவித்துள்ளதன்படி முழுமையான பெறுமதியைச் செலுத்தினாலே அவை நாணயக் கடிதங்களை வழங்கும். இதனால் பொருள்களின் இறக்குமதி தடைப்படலாம் அல்லது குறையலாம் என்று வர்த்தக சமூகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர். (ஓ,5,இ)

### யாழ்ப்பாணத்தில்...

னர். அதேவேளை நாடளாவிய ரீதியில் 175பேர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 2 ஆயிரத்து 856 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர். சுழிபுரத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பெண் ஒருவரும், சாவகச்சேரியைச் சேர்ந்த 60 வயதுடைய பெண் ஒருவரும், காரைநகரைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவரும், வேம்படியைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவரும், அரியாலையைச் சேர்ந்த 81 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை கொரோனா விடுதியில் மட்டுவிலைச் சேர்ந்த 85 வயது ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளார். அத்துடன் மீசாலை மேற்கில் வீட்டில் உயிரிழந்த 91 வயது பெண் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்ற ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். (ஒ-9,22,26,159)

### 12-18...

பூசி வழங்குவதற்குக் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர், கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் சூம் தொழில்நுட்பம் ஊடாக நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலக சுகாதார நிறுவனம் உட்பட பல சர்வதேச நிறுவனங்கள் மாணவர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதற்கான பல அளவுகோல்களை சுட்டிக்காட்டியுள்ளன. மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் திட்டம் தொடங்கியவுடன், தரம் 7 முதல் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கு தடுப்பூசி போடலாம். ஆசிரியர்கள் உட்பட கல்விசாரா ஊழியர்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்டுள்ளதால், மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றி முடிந்தவுடன் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும் என்று நம்பப்படுகிறது. சுமார் இரண்டு மில்லியன் மாணவர்களுக்கு தடுப்பூசி போட முடியும் என்றார். (ஒ-இ)

### கொரோனாவின்...

ளன. எனவே, மக்கள் பொறுப்புடன் செயற்பட்டால் மாத்திரமே சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயணக்கட்டுப்பாடு பிறப்பிக்கப்பட்ட காரணத்தால் கடந்த காலத்தை விடவும் குறிப்பிட்ட அளவு ஆரோக்கியமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன. புதிய வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், மக்களின் செயற்பாடுகளில் முழுமையான திருப்தி இல்லை. இலக்கை நோக்கி எம்மால் பயணிக்க முடிந்த போதிலும் இலக்கைத் தக்க வைக்க முடியவில்லை. அதற்கு மக்களின் செயற்பாடுகளே காரணமாகும். மக்கள் பொறுப்புடன் செயற்பட்டால் மாத்திரமே எம்மால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சுகாதார அமைச்சு, சுகாதாரப் பணியகம் மூலமாக பல்வேறு சுகாதார வழிகாட்டிகள், கட்டுப்பாட்டு வழிமுறைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் மக்கள் அதனை முழுமையாகப் பின்பற்றுவதில் சந்தேகம் உள்ளது. ஒரு சிறிய குழு தவறு செய்கின்றது.

இதனால் பெருமளவிலான மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதை சகலரும் கவனத்தில்கொள்ள வேண்டும். இப்போது நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது.

ஆனால், மீண்டும் மோசமான கொரோனாத் தாக்கம் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. கண்ணுக்குத் தெரியாத ஒரு எதிரியுடன் போராடுகின்றோம் என்பதை சகலரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும், என்றார். (ஒ-22)

### வவுனியாவில்...

படைத்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கடந்தசெவ்வாய்க்கிழமைநெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வராஜா என்பவர் கொரோனா விடுதியில் உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் புதன் கிழமை தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த சண்முகலிங்கம் என்பவரும் விடுதியில் உயிரிழந்துள்ளார்.

தொற்று உறுதிப்படுத்தப்பட்டதிலிருந்து இருவரையும் அவர்களது உறவினர்கள் மருத்துவமனையில் பார்வையிட அனுமதிக்கப்படாத நிலையில், இறுதியில் அவர்கள் உயிரிழந்த செய்தியே கிடைத்தது. சண்முகலிங்கத்தின் குடும்பத்தினரை அவரது உடலை தகனம் செய்வதற்காக மருத்துவமனை தரப்பினர் அழைத்திருந்தனர்.

அவர்கள் தமது குடும்பத்தவரின் உடலை தகனம் செய்வதற்காக சவப்பெட்டி மற்றும் ஆடைகளை வாங்கிச் சென்று மருத்துவமனையில் ஒப்படைத்தனர். சண்முகலிங்கத்தின் குடும்பத்தினர் தம்மிடம் காட்டப்பட்ட சடலத்தை பார்வையிட்ட போது அது வேறு ஒரு நபருடையது என்பது தெரியவந்துள்ளது. தமது உறவினர் இல்லை என அவர்கள் மருத்துவமனையில் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து குறித்த சடலம் யாருடையது எனத் தேடியபோது செல்வராஜா என்பவருடையது எனத் தெரியவந்துள்ளது.

செல்வராஜாவுக்கு பதிலாக அவர்களது உறவினர்களிடம் சண்முகலிங்கத்தின் சடலம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்தச் சடலத்தை எரியூட்டியதுடன் இறுதிக் கிரியைகளுக்காக அஸ்தியையும் எடுத்துச் சென்றிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் சண்முகலிங்கத்தின் குடும்பத்தினர் தமது உறவினரின் சடலம் தேவை என கோரினர். இறுதியில் செல்வராஜா குடும்பத்தினரிடம் சண்முகலிங்கத்தின் அஸ்தியை பெற்றுக் கொள்ள சம்மதித்தனர். இதனையடுத்து செல்வராஜாவின் குடும்பத்தினர் அவரது உடலைப் பெற்று மீண்டும் மயானத்துக்கு சென்று தகனம் செய்ய இணங்கினர்.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மாற்றி வழங்கப்பட்ட சம்பவங்கள் வடக்கில் பரவலாக இடம்பெற்று வருகின்றன. (ஒ-18)

### கர்ப்பம்...

என்று சுகாதார அமைச்சு விளக்கமளித்துள்ளது. கொவிட்டின் டெல்டா பரவல் காரணமாக கர்ப்பிணித் தாய்மார்கள் எதிர்கொள்ளும் ஆபத்தை கருத்தில் கொண்டு இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், மருத்துவ வல்லுநர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிபுணர்கள் என்ற முறையில் அவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பார்கள். இது சுகாதார அமைச்சின் கருத்து இல்லை என்றாலும், இந்த வேண்டுகோள் ஆர்வத்துடன் செய்யப்பட்டது. இது கட்டாய உத்தரவு அல்ல. அந்த கோரிக்கையை பரிசீலிக்க மக்களுக்கு முழு உரிமை உண்டு, என்றார். (ஒ-இ)

### முடக்கம்...

முடிவெடுக்கப்படவுள்ளது.

கொரோனா ஒழிப்பு செயலணியின் வாராந்த கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தின்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை உட்பட தற்போதைய சுகாதார நிலைமை மீளாய்வு செய்யப்பட்டு, ஊரடங்கு உத்தரவை 13 ஆம் திகதி காலை 4 மணிக்கு தளர்த்துவதா அல்லது நீடிப்பதா என்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

அத்துடன், ஒரு நாள் தளர்வின் பின்னர் ஊரடங்கு மேலும் நீடிக்கப்படலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சிலவேளை ஊரடங்கு தளர்த்தப்பட்டால் கூட மாகாணங்களுக்கிடையிலான பயணக்கட்டுப்பாடு உள்ளிட்ட நடைமுறைகள் தொடரும் எனவும் தெரியவருகின்றது.

செப்ரெம்பர் 18 ஆம் திகதி வரை ஊரடங்கை நீடித்தால் 7 ஆயிரத்து 500 கொரோனா உயிரிழப்புக்களைத் தடுக்கலாம் எனவும், ஒக்ரோபர் 2 ஆம் திகதிவரை நீடித்தால் 10 ஆயிரம் உயிரிழப்புக்களைத் தடுக்கலாம் எனவும் உலக சுகாதார நிறுவனத்தின் பங்களிப்புடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

### போதனா...

குள்ளாக்கும் கருத்து என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் விசாரணையையும் கோரியுள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியகுழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினரான வாசன் இரட்ணசிங்கம் கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நிர்வாகத்தில் மாற்றம் நிகழ்ந்தது. கடந்த 7,8 மாதங்களாக பதில் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அவர் அந்தக் கடமைகளை சிறப்பாக செயற்படுத்தினார். அத்தோடு, கொரோனாத் தொற்று வடக்கில் உக்கிர நிலைமையை காண்பித்த போது மருத்துவர்கள், தாதியர்கள், இதர சுகாதார ஊழியர்கள் அதை முகாமை செய்வதில் சிறப்பாக செயற்பட்டார்கள்.

தற்போது மீண்டும் பதவியேற்ற மருத்துவமனைப் பணிப்பாளர், வடக்கில் கொரோனாத் தொற்றுக் காரணமாக கொடிய நிலை காணப்படுவதாகவும், அதனால் சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே தனது நியமனம் இடம்பெற்றதாகவும் ஊடகங்கள் ஊடாக தகவல் பரப்பியுள்ளார். இந்த விடயம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையால் கடிதம் மூலம் எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு இத்தனை நாளாக கொரோனா தொற்றை விரட்டியடிக்க வினைத்திறனாக பணியாற்றிய சுகாதாரத்துறையினரை அவமரியாதைக்குள்ளாக்கும் விதமாகவே இந்தக் கருத்தை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பார்க்கிறது. ஊடகங்கள் மூலம் பரப்பப்பட்ட போலி தகவல் தொடர்பாக உடனடியாக விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் எழுத்து மூலம் கோரியுள்ளோம்- என்றார். (ஒ,இ)

### யாழ்ப்பாணத்துக்கு...

கைது செய்யப்பட்டுள்ளனர். குருநகர் கடற்பகுதியில் கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பாசையூரைச் சேர்ந்த 3 பேரே கைதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ணத்துக்கான இந்திய அணி அறிவிப்பு

## டோனிக்கு முக்கிய பொறுப்பு; அஸ்வின் மீண்டும் அணியில்

**புதுடில்லி, செப். 10**

**ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. அஸ்வின் நீண்ட நாள்களுக்குப் பின்னர் அணிக்குள் சேர்க்கப்பட்டார். டோனி அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.**




இந்திய அணி விவரம்:
விராட் கோலி (தலைவர்) ரோகித் சர்மா (துணைத்தலைவர்), கே.எல்.ராகுல், சூர்யகுமார் யாதவ், ரிஷப் பன்ட், இஷன் கிஷன், ஹர்திக் பாண்டியா, ரவிந்திர ஜடேஜா, ராகுல் சஹர், ரவிச்சந்திரன் அஸ்வின், அக்சர் பட்டேல், வருண் சக்ரவர்த்தி, ஜஸ்பிரித் பும்ரா, புவனேஷ்வர் குமார், முகமட் சமி
காத்திருப்பு வீரர்கள்: ஸ்ரேயாஸ் அய்யர், ஷர்துல் தாக்கூர், தீபக் சஹர். கோலியால் இதுவரை ஐ.சி.சியின் மிகப்பெரும் கிண்ணம் எதையும் கைப்பற்ற முடியவில்லை. முக்கியமான தருணத்தில் மிகப் பெரிய வெற்றிகளை எவ்வாறு பெறுவது என்பது கோலிக்குச் சிக்கல் நிறைந்ததாக இருந்து வந்தது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்கவே அணிக்கு ஆலோசகராக டோனி நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியக் கிரிக்கெட்டின் வெற்றிகரமான தலைவர், ஐ.சி.சி.யின் 3 விதமான கிண்ணங்களை அணிக்குப் பெற்றுக் கொடுத்த பெருமை டோனிக்கு இருக்கிறது. மிகப்பெரிய வெற்றிகளை எவ்வாறு பெறுவது, இக்கட்டான தருணத்தில் என்ன முடிவுகளை எடுப்பது டோனிக்கு கைவந்த கலை ஆதலால், டோனியை அணியின் ஆலோசகராக நியமித்துள்ளது பிசிசிஐ. (ம)




# இந்தியா – இங்கிலாந்து இறுதி டெஸ்ட் இன்று!

மன்செஸ்டர், செப். 10
இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் இங்கிலாந்தின் மன்செஸ்டர் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

முடிவடைந்த நான்கு ஆட்டங்களில் 2:1 என்ற அடிப்படையில் இந்தியா முன்னிலை வகிக்கின்றது. இந்த நிலையில் தொடரை குறைந்தபட்சம் சமநிலையில் முடிக்கவாவது இந்த ஆட்டத்தில் வெற்றிபெறவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இங்கிலாந்துக்கு உள்ளது. இந்த ஆட்டத்தில் வென்றாலும் தோற்றாலும் இந்தியாவிடம் இருந்து கிண்ணம் பறிக்கப்படாது.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் அஸ்வினுக்கு வாய்ப்பு வழங்கப்படாமல் இருப்பது ஒவ்வொரு நாளும் பெரும் சர்ச்சையாகி வருகின்றது. சுழலுக்குச் சாதகமான ஓவல் டெஸ்ட் ஆட்டத்தில்கூட அஸ்வின் களமிறக்கப்படவில்லை. ஆதலால் மன்செஸ்டரில் அவர் விளையாடுவாரா என்பது சந்தேகம்தான்.

இதுவரை 70 சர்வதேச சதங்களைப் பதிவுசெய்துள்ள கோலி, 71ஆவது சதத்தைப் பதிவுசெய்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றார். கடந்த இரண்டு வருடங்களாக அவரால் அடுத்த சதத்தைப் பதிவுசெய்ய முடியவில்லை. இதனால் கோலியின் தனிப்பட்ட பெறுபேறு தொடர்பிலும் இன்று எதிர்பார்ப்பு இருக்கின்றது. (ம)

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 10 . 1940



மறைவு 06 . 09 . 2021

## அமரர் வீரகத்தி கந்தப்பு

(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் இடைக்குறிச்சி வரணியை வதிவிடமாகவும் கொண்ட வீரகத்தி கந்தப்பு அவர்கள் 06-09-2021 திங்கட்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான வீரகத்தி-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான சின்னையா-அன்னபூரணம் தம்பதிகளின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், வரதராஜனின் (லண்டன்) ஆருயிர் தந்தையும், பிரியதர்ஷியின் (லண்டன்) அன்பு மாமனாரும், வர்ஷிகா, ரித்விகன் ஆகியோரின் அன்புப் பேரனும், மகேஸ்வரி, காலம்சென்ற இராஜேந்திரா மற்றும் விக்கினேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 07-09-2021 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இடைக்குறிச்சி கொடிக்காடு இந்து மாயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இடைக்குறிச்சி,**
**வரணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 03 . 1967



மறைவு 07 . 09 . 2021

## தெய்வேந்திரம் ரவீந்திரன்

யாழ். இருபாலையைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Den Helder ஐ வதிவிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் ரவீந்திரன் அவர்கள் 07.09.2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். உரும்பிராயைச் சேர்ந்த சத்தியநாதன் யோகானந்தராணி தம்பதிகளின் மூத்த மருமகனும்,சுதர்சினி அவர்களின் ஆருயிர்க் கணவரும், அனுஜன், ஹரிசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தெய்வேஸ்வரி, சர்வானந்தேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,கணேசலிங்கம், யோகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சசிகுமார், அனிஷ்குமார், ரோகினி ஆகியோரின் பாசமிகு அத்தானும்,அரவிந்தன் அவர்களின் அன்புச் சகலனும்,ஜெயப்பிரியா, சுமதி ஆகியோரின் அன்பு அண்ணாவும், அருட்சங்கர், ஆரத்திகா, நிதர்சனன், நிறோசன், சங்கீதா, அபினாஷ், அஜீஷ், அக்ஷரா, அபிநயா, அபிஷன் ஆகியோரின் பாசமிகு மாமாவும், அக்ஷயன், அயிஷா ஆகியோரின் ஆசைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு 13.09.2021 திங்கட்கிழமை அன்று மட்டுப்படுத்தப்பட்ட குடும்ப உறுப்பினர்களுடன் நெதர்லாந்து Den Helder இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**நெதர்லாந்து: +31223668282**
**இருபாலை : 021 222 9002**
**உரும்பிராய் : 021 223 1558**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10. 09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.